## மருந்துகளின் விலைகளை
# அதிகரிக்குமாறு கோரிக்கை



02 பக்கம்


Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 492 பிலவ வருடம், பங்குனி மாதம் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(01.04.2022) ஹிஜ்ரி - 1443, ஷஃபான் - 28 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30


## வெளிநாட்டு நாணயமாற்று விடயத்தில் சட்ட விதிமீறல்

பிரசன்னா மணி எக்ஸ்சேஞ்சின் லைசன்ஸ் இடைநிறுத்தம்




02 பக்கம்

# சர்வதேச கடற்பரப்பில் டீசலுடன் காத்திருக்கும் கப்பல்: கட்டணம் செலுத்தப்படும் வரை இலங்கைக்குள் வராது!

## ஜனாதிபதி வழங்கிய உத்தரவாதமும் ஏற்க மறுப்பு

02 பக்கம்



# நாட்டை உடனடியாக முடக்குங்கள்!

## சம்பிக்க ரணவக்க எம்.பி. அரசாங்கத்திடம் அவசர கோரிக்கை

அரசாங்கத்தின் கவனமின்மை மற்றும் பொறுப்பின்மையினால் மின் கட்டமைப்பும் பாரிய நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

தற்போதுள்ள நிலைமை நீடித்தால் இம்மாத நடுப்பகுதியில் முழு மின் கட்டமைப்பும் முழுமையாக முடங்கும். இதனால் ஏற்படும் விளைவுகள் மிகவும் பாரதூரமாக மாறும்.

நாட்டின் செயற்பாடுகளை போலியாக முன்னெடுத்து அவ்வாறானவொரு இக்கட்டான சூழ்நிலைக்கு மக்களை தள்ளி விடாமல் நாட்டை முழுமையாக முடக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

விரைந்து நடவடிக்கை எடுக்காமலிருந்து 24 மணிநேர மின்துண்டிப்பு மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுமாக இருந்தால், அதற்கான முழு பொறுப்பை ஜனாதிபதியும், பிரதமரும் ஏற்கவேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

02 பக்கம்

# இந்திய உதவியின்கீழ் டீசல் வந்தால் மின்வெட்டு நேரத்தைக் குறைப்போம்

## இலங்கை மின்சார சபையின் தலைவர் தெரிவிப்பு

•யோ. தர்மராஜ்

இந்தியாவின் கடன் திட்டத்தின்கீழ் கிடைக்கும் டீசலை மின்சார சபைக்கு வழங்குவதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உறுதியளித்துள்ளது. அதற்கமைய டீசல் கிடைத்தால் தற்போதைய மின்வெட்டை 4 மணித்தியாலத்தால் குறைக்க முடியும் - என மின்சார சபையின் தலைவர் பேர்டினாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (31) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மின் விநியோகத்தை விட மின்சக்தி பிரச்சினையே காணப்படுகின்றது. எங்களிடம் 3 ஆயிரத்து 300 மெகா வோர்ட் மின்சாரத்தை உற்பத்தி...

02 பக்கம்

கமெண்ட் கந்தர்..



நாட்டை இனி என்ன முடக்க வேண்டிக்கிடக்குது சம்பிக்க ஐயா...



கோட்டா - மஹிந்தவின் மக்கள் விரோத ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று இடம்பெற்ற கவனயீர்ப்புப் போராட்டம்.

# ஈழத் தமிழர்களுக்கு உதவிகளைச் செய்ய தமிழக அரசு தீர்மானம்

## அனுமதிக்க பிரதமர் மோடியிடம் முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை



02 பக்கம்

# மின்சாரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு மக்களுக்கும் உண்டு



## மின்குமிழொன்றை அணைக்கக் கோருகிறார் அமைச்சர் பவித்ரா

02 பக்கம்



# அதாவுத காலமானார்

முன்னாள் அமைச்சர் அதாவுத கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று (31) காலை காலமானதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதாவுதா செனவிரத்ன 1931ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி பிறந்தார். இறக்கும்போது அவருக்கு வயது 91.

02 பக்கம்



# மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த பிரேமலால் எம்.பி. உள்ளிட்ட மூவர் விடுதலை

02 பக்கம்




ஆளுங்கட்சியிலுள்ள மூத்த அமைச்சர்கள் இருவர் விமல் அணியுடன் இரகசிய பேச்சுகளில் ஈடுபட்டுள்ளதாக தகவல்.

இவர்களைத் தவிர மேலும் 7 எம்.பிக்கள் விமல், கம்மன்பிலவுடன் பேச்சு நடத்தி, அரசிலிருந்து வெளியேறுவதுபற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்களாம்.

புதுவருடம் முடிந்த கையோடு நாட்டில் பொருளாதார நெருக்கடியுடன் அரசியல் நெருக்கடியும் வரலாமென சொல்லப்படுகிறது.

# அரச எதிர்ப்பு போராட்டத்திற்கு மக்கள் ஆதரவு வலுக்கிறது

## ஐ.தே.க, ஜே.வி.பி. ஆதரவில்லை; சஜித் பிரேமதாச ஒத்துழைப்பு

•யோ. தர்மராஜ்

அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக இனந்தெரியாத குழுவொன்றினால் நாளை மறுதினம் (03) ஏற்பாடு செய்துள்ள போராட்டத்திற்கு மக்கள் மத்தியில் பெரும் ஆதரவு கிடைத்துவருகின்றது

இந்தப் போராட்டம் குறித்து அரசின் பாதுகாப்புத்துறையால் உத்தியோகபூர்வ அறிவிப்புகள் எதுவும் வெளியிடப்படவில்லை. அதே போன்று, இப் போராட்டம் தொடர் பாக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தேசிய மக்கள் சக்தி என்பன...

02 பக்கம்

# மின்வெட்டால் பாதிக்கப்பட்டோருக்கு விசேட பரிசுகளை வழங்கும் அரசு

அதிகளவு நேர மின்வெட்டினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேட பரிசுகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளதாக தெரிகிறது.

அதன்படி அதிகளவு மின்வெட்டினால் பாதிக்கப்பட்டவர்களை கிராமசேவகர் ரீதியில் அடையாளங்கண்டு அவர்களுக்கு பரிசுகளை தபால் மூலம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

# விசேட பஸ் சேவை இன்று ஆரம்பம்

எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு, இயன்றளவு மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்தி பயணிகளின் போக்குவரத்தை இலகுபடுத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக, இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

மேலும், இன்று ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் விசேட போக்குவரத்து வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பஸ் பயணத்தின்போது கொவிட் சட்ட விதிகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அதாவுத காலமானார்...

1989ஆம் ஆண்டு கேகாலை பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட அவர் பல அமைச்சுப் பதவிகளில் பணியாற்றினார். அதேபோல கேகாலை பகுதி தமிழ்ப் பிரதேசங்களுக்கும் சேவையாற்றியுள்ளார்.

## மருந்துகளின் விலைகளை...

மருத்துவகைகளின் விலைகளை மீண்டும் அதிகரிக்குமாறு மருந்து இறக்குமதியாளர்கள் சங்கத்தினர் சுகாதார அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

டொலருடன் ஒப்பிடுகையில், ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ள காரணத்தினால் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக மருந்து உற்பத்தி விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சின் செயலாளர், வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர்களின் கோரிக்கையை மதிப்பீட்டிற்காக சமர்ப்பித்துள்ளதாக இராஜாங்க அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, சில மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக அரச வைத்தியசாலைகளின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

## மின்வெட்டால்...

(என்ன வாசகர்களே... ஏமாந்து விட்டீர்களா? இன்று ஏப்ரல் பூல் - முட்டாள்கள் தினம். நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையிலும் மக்கள் புன்னகையுடன் இருக்கவேண்டியெண்ணி நினைத்து இட்ட செய்தி இது. வாசகர்கள் இதனை தமாஷாக எடுப்பார்களென நம்புகிறோம்...)

## வெளிநாட்டு நாணயமாற்று...

பிரசன்னா மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணப்பரிவர்த்தனைக்கான அனுமதிப்பத்திரத்தை இலங்கை மத்திய வங்கி இடைநிறுத்தியுள்ளது.

பிரசன்னா மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட் அதிக மாற்று விகிதங்களை வழங்குவதாக பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட புகார்களைக் கருத்தில் கொண்டு, மத்திய வங்கியின் அந்நிய செலாவணி திணைக்களம் 30.03.2022 அன்று பிரசன்னா மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட் தொடர்பில் விசாரணையை நடத்தியது. விசாரணையின்படி, பிரசன்னா மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட் அதிக மாற்று விகிதங்களை வழங்கியமை மற்றும் அதன் மூலம் உரிமம் பெற்ற வங்கிகள் வழங்கும் விகிதங்களை விட அதிக விலையில் வெளிநாட்டு நாணயத்தை அதன் வாடிக்கையாளர்களிடமிருந்து வாங்க முயற்சித்தமை, அந்நியச் செலாவணிச் சட்டம் எண். 12 2017 (FEA) இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பணம் மாற்றுபவர்களுக்கு வழங்கப்பட்ட வழிமுறைகளை மீறுதல் என்பன கண்டறியப்பட்டன.

அதன்படி, நிதிக்கட்டுப்பாடு விதிகளின் கீழ், பிரசன்னா மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை நேற்று 31.03.2022 முதல் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

## ஈழத் தமிழர்களுக்கு...

இலங்கையில் பொருளாதார நெருக்கடியில் தவிக்கும் தமிழர்களுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய தூதரகத்தின் வழியாக உதவிகளை வழங்க மத்திய அரசு அனுமதிக்க பிரதமரிடம் முதல்வர் மு.க. ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள பிரதமர் அலுவலக அறையில் பிரதமர் மோடியை மு.க.ஸ்டாலின் சந்தித்து பேசினார்.

கச்சதீவு அருகே மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் தினமும் இலங்கை கடற்படையால் சிறைப்பிடித்து செல்வது பற்றியும் இதன்போது தமிழக மீனவர்கள் பாதிக்கப்படுவதை தடுக்கும் வகையில், நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் இதன்போது அவர் கேட்டுக் கொண்டார்.

மேலும் தமிழ்நாட்டில் பிளஸ் டூ மதிப்பெண்கள் அடிப்படையில் மருத்துவ மாணவர் சேர்க்கை நடத்த அனுமதிக்க வேண்டும் எனவும் பிரதமரிடம் முதல்வர் மு.க. ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...
அழையுங்கள்
0761393805

தமிழன் தமிழன் ஜூனியர்
கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.
தொடர்பு - சந்திரகுமார்
0777983308

தமிழன் வாசகர்களே!
தமிழன் இணையத்தளத்தில்
வெளியாகும் செய்திகளை
www.thamilan.lk
ஊடாக மாத்திரமின்றி
www.thamilannews.com
மூலமாகவும் உடனுக்குடன்
அறிந்துகொள்ளலாம்
தமிழன் தமிழன்

## அரச எதிர்ப்பு போராட்டத்திற்கு...

தங்களுடைய நிலைப்பாடுகளையும் தெரிவித்துள்ளன.

மேலும், இப்போராட்டத்திற்கு தான் தலைமை ஏற்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச அறிவித்துள்ளார்.

பொருட்கள் விலை அதிகரிப்பு, எரிபொருள், எரிவாயு, பால்மா உள்ளிட்டவற்றுக்கு மக்கள் வரிசைகளில் நிற்பதுடன், நாளுக்கு நாள் மின் வெட்டு நேரமும் அதிகரித்துள்ளதால் அரசாங்கத்தின் மீது அதிருப்தியடைந்துள்ள இனந்தெரியாத குழுவொன்று நாளைமறுதினம் 03ஆம் திகதி வீதியில் இறங்கி போராடுவதற்கு மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இது யாரால் ஏற்பாடு செய்யப்பட்டது என்பது குறித்து எவ்வித தகவல்களும் இல்லாத நிலையிலும், அரசுக்கு எதிரான போராட்டம் என்பதால் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பும் ஆதரவும் அதிகரித்து வருகின்றது.

இந்த நிலையில், இப் போராட்டம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தன்னுடைய நிலைப்பாட்டை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ஒருங்கிணைப்பு இல்லாத குழுவினரால் ஏற்பாடு செய்யப்படும் எந்தவொரு போராட்டம் மற்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி இணைந்துகொள்ளாது.

எங்களுடைய சத்தியாக்கிரகப் போராட்டத்தை நாடு பூராகவும் வியாபிப்பதற்கு நாங்கள் பாடுபடுவோம். அதன்படி, அடுத்த சத்தியாக்கிரக போராட்டம் ஏப்ரல் 6ஆம் திகதி மாத்தறையில் முன்னெடுக்கப்படும். இதில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்" - என்றார்.

அதேபோன்று, "நாடு நெருக்கடியான நிலையில் இருப்பதை நாம் அறிவோம். ஒவ்வொரு நொடியும் சமூகம் பாரிய நெருக்கடியை நோக்கிச் சென்றுக்கொண்டிருக்கின்றதுடன், சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரும் இதனால் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறானதொரு தருணத்தில் அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் ஏனைய தரப்பினரும் இந்த நெருக்கடிகளுக்கு எதிராக எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நெருக்கடிக்கு எதிராகப் போராடுவதற்கு அமைப்புகளுக்கு மாத்திரமின்றி பொதுமக்களுக்கும் உரிமை உண்டு. ஆனால், பொறுப்பேற்காத, ஏற்பாட்டாளர்கள் இல்லாத, ஒழுங்கமைக்கப்படாத போராட்டங்கள் குறித்து விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். ஏனெனில் இதுபோன்ற பொறுப்பற்ற பொதுப் போராட்டங்களுக்குப் பின்னால் கூட பாரிய ஆபத்து இருக்கலாம்" என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தன்னுடைய நிலைப்பாட்டை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, "இன்று நாட்டில் மக்களுக்கு தேவையான எரிபொருள், எரிவாயு, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் பால்மா ஆகியன இல்லை. எவ்வாறு மக்கள் உயிர் வாழ்வது. இனியும் எங்களால் பொறுமையாக இருக்க முடியாது.

இயலாமையின் ஆட்சியாளரின் ஆட்சியே இடம்பெறுகிறது. மக்களை வாழ வைப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இந்த அரசாங்கம் அந்தப் பொறுப்பிலிருந்து விலகியுள்ளது. எனவே, எங்களுடைய நாடு பலரின் ஏல இடமாக மாறியுள்ளது.

சொத்துகள் எங்களிடமிருந்து விலகிச் செல்கின்றன. பொறுத்ததுபோதும். இன, மத, கட்சி பேதமின்றி ஒன்றிணைந்து நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவோம்.

எனவே, அனைவரும் 3ஆம் திகதி வீதிக்கு இறங்குவோம். நானும், நாங்களும் வருவோம். நாட்டை பாதுகாப்போம்" என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தன்னுடைய நிலைப்பாட்டை தெரிவித்துள்ளார்.

## மின்சாரத்தை...

**யோ.தர்மராஜ்**

நாட்டில் மின் நெருக்கடிகளின்போது மின்சாரத்தை பாவிக்கும் நுகர்வோர் தங்களுடைய பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். மின்சாரத்தை பாதுகாக்கும் பாரிய பொறுப்பு மக்களுக்கு இருப்பதால் நீங்கள் அணைக்கும் ஒரு மின் குமிழின் மின்சாரத்தை நாளைய நாளுக்காக சேமிக்க முடியும் என மின்சக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

அத்தோடு, மின் நெருக்கடி ஏற்பட்டுள்ள போதிலும் வழிபாட்டு தலங்கள் மற்றும் ஹோட்டல்களில் தேவையற்ற விதத்தில் மின்சாரம் விரயம் செய்யப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (31) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமனல வாவி, மவுசாகலை, கொத்மலை உள்ளிட்ட நீர்நிலைகளின் நீர்மட்டம் வெகுவாக குறைவடைந்துள்ளன.

இவ்வாறு நீர் மட்டம் குறைவடைந்துள்ளமையினால் மின் உற்பத்தி செய்வதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால், மின் விநியோகத்தில் பாரிய நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நெருக்கடிகளின்போது மின்சாரத்தை பாவிக்கும் நுகர்வோர் தங்களுடைய பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். மின்சாரத்தை பாதுகாக்கும் பாரிய பொறுப்பு மக்களுக்கு இருப்பதால் நீங்கள் அணைக்கும் ஒரு மின் குமிழின் மின்சாரம் நாளைய நாளுக்கான மின்சாரத்தை சேமிக்க முடியும்.

சில வழிபாட்டு தலங்களில் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி மின்சாரம் பாவிக்கப்படுவதுடன் குறைந்தளவான மின் கட்டணத்தை அறிவிடுவதால் சில ஹோட்டல்கள் தேவையற்ற விதத்தில் மின்சாரத்தை விரயம் செய்கின்றன.

மக்களின் பாவனை அதிகரிக்கும்போது தேவையான மின்சாரத்தை எங்களால் உற்பத்தி செய்ய முடியாத நிலைமை ஏற்படும். எனவே, நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளபோது வழிபாட்டுத் தலங்களும் கட்டுப்பாடுகளின்றியும் ஹோட்டல்களில் மின்சாரத்தை விரயம் செய்யப்படுவதையும் தவிர்க்க வேண்டும்.

இலங்கை வரலாற்றில் இன்று அதிகாலையில் 2 ஆயிரத்து 500 மெகா வோர்ட் மின்சாரம் கேள்வி இருக்கிறது. இவ்வாறிருக்கும் போது போதியளவான மின்சாரத்தை வழங்க முடியாது.

நீர் மின் உற்பத்தி இல்லாது முன்னோக்கிச் செல்வது பிரச்சினையாக இருக்கும். எனினும், புத்தாண்டு காலத்தில் மக்கள் மற்றும் நாட்டின் மின் பாவனையும் குறையும். குறிப்பாக, தொழிற்சாலைகள், அரச நிறுவனங்கள், கடைத் தொகுதிகள் என்பன மூடப்பட்டிருக்கும் போது மின் பாவனையும் குறைவடையும்.

ஆனால், இவ்வாறான நீர் மின் உற்பத்தி மற்றும் எரிபொருள் மின் உற்பத்தி பாதிப்புகள் இல்லாதபோதும் 2019ஆம் ஆண்டு நான்கு மணித்தியாலம் மின் வெட்டு அமுல்படுத்தப்பட்டது. இன்று நீர் மட்டம் குறைவடைந்துள்ளதால் 10 மணித்தியாலத்திற்கு மேலாக மின்வெட்டை அமுல்படுத்த வேண்டியுள்ளது. மின் தேவையை பூர்த்தி செய்வதற்கு மேலும் சில மின் நிலையங்களை உருவாக்க வேண்டும் - என்றார்.

## சர்வதேச கடற்பரப்பில்...

டீசலுடன் சர்வதேச கடற்பரப்பில் கப்பல் தரித்து நிற்பதாகவும் கட்டணம் செலுத்தப்பட்டால் தான் இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைக்கு அவசியமான டீசலுடன் கப்பல் ஒன்று சர்வதேச கடற்பரப்பில் தரித்து நிற்பதாகவும் கட்டணம் செலுத்தப்பட்டால் மாத்திரம் இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைய முடியும் என கப்பலின் கப்டன் தெரிவித்துள்ளதாகவும், கட்டணம் செலுத்தப்படாததால் அவர் கப்பலுடன் இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைய மறுக்கின்றார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கப்பலில் எவ்வளவு டீசல் உள்ளது என்பது தெரியவில்லை என தெரிவித்துள்ள அதிகாரிகள் கட்டணம் செலுத்தப்படும் வரை கப்டன் கப்பலை சர்வதேச கடற்பரப்பில் வைத்திருக்கின்றார் என தெரிவித்துள்ளனர்.

கப்பலிற்கு கட்டணத்தை செலுத்துவோம் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளபோதிலும் ஜனாதிபதியின் உத்தரவாதத்தை கப்பல் கப்டன் ஏற்க மறுத்துள்ளார்.

தனது கப்பல் இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்தால் நீண்டநாட்கள் காத்திருக்கவேண்டிய நிலையேற்படலாம் என அவர் அஞ்சுகின்றார். இலங்கையால் கட்டணங்களை செலுத்த முடியாததால் அந்த நிலையேற்படும் என அவர் கருதுகின்றார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கட்டணம் தயாராகிவிட்டது என அரசாங்கம் அறிவித்ததும் கப்பல் இலங்கை கடற்பரப்பிற்குள் நுழையும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

## மரணதண்டனை...

மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூவரை விடுவித்து விடுதலை செய்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூவருக்கு இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தினால் 2020ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் திகதி மரணதண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

2015 ஜனாதிபதித் தேர்தலின்போது கஹவத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றின்போது நபரொருவரை சுட்டுக் கொலை செய்தமை உள்ளிட்ட குற்றங்களுங்காக இவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டை உடனடியாக...

நாட்டில் ஏற்பட்டுள்ள மின்துண்டிப்பு தொடர்பில் விளக்கமளிக்கும்போதே நேற்று (31) மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

75 இலட்சம் மக்களுக்கும் இன்று இருளடைந்த யுகமொன்றே தோற்றம்பெற்றுள்ளது. 24 மணிநேரத்தில் 13 மணிநேரம் மின்சாரம் இல்லாத இருளடைந்த நாட்டில் வாழவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. சூரிய உச்சத்தின் காரணமாக வெப்பநிலை அதிகரித்துள்ளதுடன் நீர் பயன்பாடும் அதிகரித்துள்ளது. இந்த சகல பிரச்சினைகளுக்கும் மின்சாரம் முக்கிய காரணமாக மாறியுள்ளது.

மின்சாரம் இல்லாமல் வீடுகள் அபாயகரமான இடமாக மாறியுள்ளன. அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் வேலையில்லாத இடமாக மாறியுள்ளன. தொழிற்சாலைகள் மூடப்படும் நிலை உருவாகியுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர வியாபார நிலையங்கள் முழுமையாக நிர்க்கதியாகியுள்ளன.

வாயு சீரமைப்பு முறைக்கு மேலதிகமாக குளிர்சாதனங்களினூடாக மருந்து மற்றும் உணவுப்பொருட்களை காலாவதியாகாமல் பாதுகாத்து வந்த இடங்கள் இன்று பாரிய அபாயகரமான நெருக்கடிக்குள்ளாகியுள்ளன. உணவு மற்றும் மருந்து வகைகளின் தரம் தொடர்பில் பாரதூரமான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இதனால், உயர் வசதிகள் கொண்ட சுப்பர் மார்க்கெட்டுகள் தவிர்ந்த 4 இலட்சத்துக்கும் அதிகமான சிறியளவான விற்பனை நிலையங்கள் மூடப்படும் நிலை உருவாகியுள்ளது.

நாட்டிலுள்ள 10 இலட்சத்துக்கும் அதிகமான சிறிய மற்றும் நடுத்தர தொழிற்றுறைகள் மூடப்படக்கூடிய இக்கட்டான நிலை தோற்றம் பெற்றுள்ளது. இவை அனைத்தும் மின் விநியோக கட்டமைப்பு சந்தித்துள்ள சவாலின் காரணமாக உருவாகியுள்ளது என்பதை மறுக்க முடியாது.

ஆனால், இதுவரையிலும் அரசாங் கம் இதனை புரிந்துக்கொள்ளவில்லை என்பது கவலைக்குரியதாகும். மின் கட்டமைப்புக்கு ஏற்படவுள்ள நெருக்கடி தொடர்பில் சில மாதங்களுக்கு முன்னரே நான் எச்சரித்திருந்தேன்.

எரிபொருள் விநியோகம் சீராக இடம்பெறாமையினால் எரிபொருள் நிலையங்கள் இயங்காமல் நெருக்கடிக்குள்ளாகியுள்ளன. இந்நிலையில், இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளின் காரணமாக மின்சார சபை பெரும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. மின்சார சபையின் நிர்வாக நடவடிக்கைகள் முழுவதும் நீரினாலேயே முன்னெடுக்கப்படுகின்றன. அதிகளவான மின் உற்பத்தி நீரினாலேயே முன்னெடுக்கப்படுகின்றது. அரசாங்கத்தின் கவனயீனம் காரணமாக மின் உற்பத்திக்கான நீர் மட்டம் 20 வீதம் வரையில் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்நிலை தொடர்ந்து நீடித்தால் டீசல், மசகு எண்ணெய், நிலக்கரி எவ்வளவு எரிசக்தி இருந்தாலும், எதிர்வரும் 10ஆம் திகதியின் பின்னர் நிச்சயமாக ஒட்டுமொத்த மின் கட்டமைப்பு கடும் நெருக்கடியை சந்திக்கும்.

அதனால், தொழில்நுட்ப ரீதியான தீர்வொன்றை பெற்றுக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்த பருவ மழைக்காலம் மே மாத நடுப்பகுதியிலேயே ஆரம்பிக்கிறது. ஆகவே, தொழில்நுட்ப ரீதியான தீர்வொன்றை பெற்றுக்கொள்ளும் வரை அல்லது அடுத்த பருவ மழைக்காலம் வரையும் முழுமையாக நாட்டை முடக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று நாட்டில் போலியான செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன. அரச நிறுவனங்கள் திறக்கப்பட்டிருந்தாலும் அங்கு எந்தவொரு பணியும் முன்னெடுக்கப்படுவதில்லை. வீதிகளில் டீசல் உள்ளிட்ட எரிபொருட்கள் வீணடிக்கும் செயற்பாடு மாத்திரமே இடம்பெறுகின்றன. முழு நாடும் அராஜகத்தை சந்தித்துள்ள நிலையில், தேவையின்றி மாணவர்களை பாடசாலைகளுக்கும், பணியாளர்களை தொழிற்சாலைகளுக்கும் அழைக்க வேண்டிய அவசியமில்லை. இது தேவையில்லாத வீண் விரயத்தை ஏற்படுத்தும். அத்தியாவசிய சேவைகளை மாத்திரம் முன்னெடுத்துக்கொண்டு கொரோனா நிலைமைகளின்போது நாட்டை முன்னெடுத்ததுபோன்று நாட்டை உடனடியாக முடக்க வேண்டும் என்றே மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

மே மாதம் வரை தற்போது இருப்பில் இருக்கும் நீரை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காரணம், நீர் மின் உற்பத்திக்காக மாத்திரம் பயன்படுத்தக் கூடாது. குடிநீராகவும் விவசாயத்துக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. நீர் மின் உற்பத்தி தவிர்ந்த மின் உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்ப ரீதியான மாற்று வழிகள் இருக்கின்றன. போலியாக நாட்டை முன்னெடுத்து செல்லவோ, எச்சரிக்கையின்றி செயற்படாமல் உடனடி நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் மின் உற்பத்திக்கு மாறாக மின் உற்பத்தி செய்யக்கூடிய வழிமுறைகளை ஏற்படுத்துமாறு மின்சார சபைக்கு அரசாங்கம் உத்தரவிட வேண்டும்.

இவ்வாறானவொரு நிலையை நாடு சந்தித்ததில்லை. இதனை புதிய சவாலாகவே கருதவேண்டும். இப்போதாவது, இந்நிலைமைக்கு மாற்று நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுக்காமல், 24 மணிநேரமும் நாட்டில் மின் துண்டிப்பு மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டால் அதற்கான முழு பொறுப்பையும் ஜனாதிபதியும் பிரதமரும் ஏற்க வேண்டும் - என்றார்.

## இந்திய உதவியின்...

செய்யும் நிலையங்கள் இருக்கின்றன. ஆயிரத்து 398 மெகா வோர்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நீர் மின் உற்பத்தி நிலையங்களும் 630 மெகா வோர்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் அனல் மின்நிலையங்களும் 900 மெகா வோர்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களும் இருக்கின்றதுடன், 500 மெகா வோர்ட் மின்சாரத்தை தனியார் நிலையங்களிலிருந்தும் காற்றாலை மற்றும் சூரிய மின்சக்தியின் ஊடாக 900 மெகா வோர்ட் மின்சாரத்தையும் பெற்றுக்கொள்கின்றோம்.

இந்தளவான மின்சார உற்பத்தி இருந்தாலும் தற்போதுள்ள 2ஆயிரத்து 850 மெகா வோர்ட் மின்சாரத்துக்கான தேவையை பூர்த்தி செய்ய முடியாதமையினாலேயே நாங்கள் மின் வெட்டை அமுல்படுத்த வேண்டியுள்ளது. நீர் மின் உற்பத்தி 25 வீதத்திற்கும் குறைவாகவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவுமே மின் வெட்டை அமுல்படுத்த வேண்டியுள்ளது.

கடந்த காலத்தில் எரிபொருள் கிடைத்தமையினால் நீர் மின் உற்பத்தி இல்லாத சமயத்திலும் மின்சாரத்தை உரிய முறையில் வழங்க முடிந்தது. எனினும், தற்போது எங்களுக்கு பற்றாக்குறையாகவே எரிபொருள் கிடைக்கின்றன. இதனால் தேவையான மின்சாரத்தை வழங்க முடியாதமையினால் நாங்கள் மின் வெட்டை அமுல்படுத்த வேண்டியுள்ளது.

இந்த நிலையில், நாளை (02) இந்தியாவின் கடன் திட்டத்தின் கீழ் டீசல் தொகை கிடைக்கவுள்ளது. இதில் குறிப்பிட்ட தொகையை எமக்கு வழங்குவதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உறுதியளித்துள்ளது.

அதற்கமைய எமக்கு டீசல் கிடைத்தால் தற்போதைய மின் வெட்டை 4 மணித்தியாலத்தால் குறைக்க முடியும்.

மழையும் எரிபொருளும் கிடைத்தால் மின் வெட்டை குறைக்க முடியும். நாங்கள் விரும்பி 10 மணித்தியால மின் வெட்டை அமுல்படுத்தவில்லை. இது எங்களுடைய கைகள் மீறியே இடம்பெறுகின்றன – என்றார்.

# மத்திய கிழக்கு நாடுகளில் 87,000 பெருந்தோட்டப் பெண்கள்

## தோட்ட நிர்வாகங்களின் குறைபாடே பிரதான காரணமென அமைச்சர் நிமல் தெரிவிப்பு

பெருந்தோட்டத்துறை நிர்வாகம் முறையாக கவனிக்காததால் பெருந்தோட்டத்துறையில் தொழில்புரியும் பெண்களில் 87 ஆயிரம் பேர் மத்திய கிழக்கில் பணிப்பெண்களாக வேலைசெய்கின்றனர் - என்று தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்கள் அநீதியான முறையில் நடத்தப்படுவதை தவிர்க்க புதிய சட்டங்கள் கொண்டுவரப்படுமெனவும் அவர் கூறினார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதி குறித்து கிடைத்துள்ள முறைப்பாடுகள் சம்பந்தமாக தோட்டக் கம்பனிகளின் பிரதிநிதிகள் மற்றும் தொழிற்சங்கங்களின் தலைவர்களுடன் தொழில் திணைக்களத்தில் கடந்த 29ஆம் திகதி நடைபெற்ற பேச்சு வார்த்தையின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தோட்டக் கம்பனிகள் தொழிலாளர்களுக்கு பல்வேறு அநீதிகள், அச்சுறுத்தல்களை இழைப்பதாக பெருந்தொகையான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவித்த அமைச்சர், தோட்டத் தொழிலாளர்களை தொழில் சட்ட திட்டங்களின்படி முறையான தொழில் நிலையை ஏற்படுத்தித் தருவதற்காக புதிய சட்டதிட்டங்கள் கொண்டுவரப்படும் எனவும் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த தோட்டக் கம்பனி பிரதிநிதிகள் சில தோட்டங்களில் இவ்வாறு தொழில் சட்டங்களை மீறும் சம்பவங்கள் இடம்பெறுவதாக ஏற்றுக்கொண்டனர்.

தொழில் அமைச்சின் அதிகாரிகள் இதுகுறித்து விசாரணை நடத்தி நடவடிக்கை மேற்கொள்வதற்கு தாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என அந்தப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

தொழிலாளர்கள் உறுப்பினராகவுள்ள தொழிற்சங்கங்களுக்கு தொழிலாளர்கள் வழங்கும் சந்தா பணத்தை தொழிற்சங்கங்களின் கணக்குகளுக்கு வைப்பிலிட தோட்டக் கம்பனிகள் பின்நிற்பதால் இந்த சந்தா பணத்தை தொழிற்சங்கங்களின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்வதை உறுதிப்படுத்த புதிய சட்டங்கள் கொண்டுவரப்படுமென தெரிவித்த அமைச்சர் தோட்டத் தொழிலாளர்களின் நலன்புரி மற்றும் அவர்களது தொழில் பாதுகாப்புக்காக விசேட புதிய சட்டமூலம் கொண்டுவருவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார். தேயிலை பொருளாதாரத்தை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதால் தோட்டத் தொழிலாளர்களின் நலன்புரி மற்றும் தொழில் பாதுகாப்பை உறுதிசெய்ய தேவையான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுக்கவேண்டியுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்தப் பேச்சுவார்த்தையில் அமைச்சின் செயலாளர் யாப்பா பத்திரன மற்றும் தொழில் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி ஆகியோரும் தோட்ட முதலாளிமார் சங்கப் பிரதிநிதிகளும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

## 9,000 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிதி



2021ஆம் ஆண்டிற்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட அடிப்படையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளை பெற்று சித்தியடைந்த 9,000 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிதி வழங்கப்படவுள்ளது.

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் அங்கத்தவராகவுள்ளவர்களின் பிள்ளைகளுக்கும் இப்புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

15,000 ரூபா பெறுமதியான இப்புலமைப் பரிசிலைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் தலைமைக் காரியாலயத்திலும் மற்றும் பிராந்திய காரியாலயத்திலும் பெற்றுக்கொள்ள முடியும்.

மே மாதம் 30ஆம் திகதிவரை விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி சமர்ப்பிக்க முடியும்.

# பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை குறித்து மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் ஆராய்வு





*(மன்னார் நகர் நிருபர்)*

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (31) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெலின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, மாவட்ட ஒருங்கிணைப்புத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ரிஷாட் பதியுதீன், சார்ள்ஸ் நிர்மலநாதன், கே.திலீபன், திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள், இராணுவம், பொலிஸ், கடற்படை அதிகாரிகள் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

இக்கலந்துரையாடலில் மீன்பிடி, விவசாயம், கால்நடை, கல்வி, சுகாதாரம், உள்ளூராட்சி திணைக்கள, கூட்டுறவு மற்றும் வீதி அபிவிருத்தி, மின்சாரம், நீர் வளங்கள், அபிவிருத்தி செயற்பாடுகளின் தற்போதைய நிலை, பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

மேலும் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை, பின்தங்கிய கிராமங்களிலிருந்து உரிய போக்குவரத்து வசதி இல்லாமையினால் மாணவர்களும், ஆசிரியர்களும் பாட சாலைக்கு சென்று வருவதில் ஏற்பட்டுள்ள சிரமங்கள் குறித்து உரிய அதிகாரிகளினால் சுட்டிக் காட்டப்பட்டது.

மாணவர்கள், ஆசிரியர்களின் போக்குவரத்து பிரச்சினைக்கு மன்னார் மாவட்ட செயலாளர் தலைமையில் தனியார் மற்றும் அரச போக்குவரத்து சபையினருடன் கலந்துரையாடலை மேற்கொண்டு தீர்வுகள் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இரத்தினபுரியில் இவ்வருடம் 97 கொவிட் மரணங்கள் பதிவு

## மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தகவல்

*(சிவா ஸ்ரீதரராவ்)*

இவ்வருடம் இதுவரை 97 கொவிட் மரணங்கள் உட்பட ஒரு டெங்கு மரணமும் மற்றும் ஒரு எலிக்காய்ச்சல் மரணமும் பதிவாகியுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் விசேட வைத்தியர் நிபுணர் லக்மால் கோனார தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மற்றும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவல ஆகியோர் தலைமையில் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இவ்வருடம் ஜனவரி மாதம் 150 பேரும், பெப்ரவரி மாதம் 110 பேரும், மார்ச் மாதம் 101 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், டெங்கு காய்ச்சலால் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன் இவ்வருடம் ஜனவரி மாதம் 86 பேருக்கும், பெப்ரவரி மாதம் 45 பேரும், மார்ச் மாதம் 48 பேரும் எலி காய்ச்சலினால் பாதிக்கப் பட்டுள்ளதுடன், ஒருவர் உயிரிழந்துள்ளதாக இரத்தினபுரி மாவட்ட தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் விசேட வைத்தியர் நிபுணர் லக்மால் கோனார மேலும் தெரிவித்துள்ளார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட, இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபோத்தாகம உட்பட அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# தெரிவுக்குழுவில் பெண்கள் பிரதிநிதித்துவம் - மக்கள் அபிப்பிராயத்துக்கு எதிராக யோசனைகள் முன்வைப்பு

## எதிர்வரும் காலங்களில் ஜனநாயக முறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க பெப்ரல் கோரிக்கை

தேர்தல் முறைமை மற்றும் சட்டங்கள் தொடர்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக நியமிக்கப் பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமையில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவம் உள்ளிட்ட மக்கள் அபிப்பிராயத்துக்கும் எதிரான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (பெவ்ரல் அமைப்பு) தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமை தொடர்பில் எதிர்வரும் கலந்துரையாடல்களில் பெண்களின் பிரதிநிதித்துவம், இளைஞர்களுக்கு ஏற்ற பிரதிநிதித்துவம், மக்கள் அபிப்பிராயத்துக்கு பங்கம் ஏற்படாத வகையிலான யோசனைகளை முன்வைக்குமாறு தெரிவித்து அந்த அமைப்பின் நிறைவேற்று அதிகாரி ரோஹண ஹெட்டியாராச்சி நேற்று (31) கல்வி அமைச்சரும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவருமான தினேஷ் குணவர்தனவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது. அந்தக் கடிதத்திலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாட்டின் ஜனநாயக கொள்கைகளை வலுப் படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட அநேகமான நாடாளுமன்ற குழுக்களில் நீங்கள் முக்கிய பங்காற்றியுள்ளீர்கள். அவற்றினூடாக நாட்டுக்கு பங்களிப்புச் செய்த அநேகமான சாதக திருத்தங்களை நாங்கள் வரவேற்கிறோம். அதேபோன்று தற்போதைய தேர்தல் சட்டதிருத்தங்களுக்காக நியமிக்கப்படும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவராகவும் நீங்கள் கடமையாற்றுகிறீர்கள்.

இருந்தபோதிலும், இதுவரையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமையின் திருத்தம் தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பேசப்பட்டதாக தெரிவிக்கப் படும் சில காரணங்கள் மற்றும் அறிக்கைகள் ஜனநாயக பிரதிநிதித்துவ முறைக்கு அப்பாற்பட்ட விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டுள்ளது என்பதை நாங்கள் அவதானித்துள்ளோம்.

தொகுதிவாரி முறைமையை 70 சதவீதத்தால் அதிகரித்தல், குறைந்த தேர்தல் வாக்குவீதத்தை 2.5 சதவீதமாக கொள்ளுதல், இணைப்புத் தொகுதிகளை நீக்குதல், போனஸ் தொகுதிகளை அறிமுகப்படுத்துதல் போன்ற காரணங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இந்த யோசனைகள் அமுலுக்கு வருமாக இருந்தால் பொது மக்கள் அபிப்பிராயத்துக்கமைய பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படும் முறை பாரிய சவாலை எதிர்க்கொள்ளும்.

இதற்கு மேலதிகமாக சிறியளவான அரசியல் கட்சிகள் அரசியல் பங்கேட்புகளிலிருந்து விலக நேரிடும். உள்ளூராட்சிமன்ற முறையை திருத்தும் ஆரம்ப நோக்கம் சவாலுக்குள்ளாகியுள்ளதுடன், இந்த யோசனைகளில் உள்ளூராட்சிமன்ற நிறுவனங்களின் அதிகாரம் மற்றும் உறுதிப்பாடு தொடர்பில் கவனம் செலுத்தவேண்டி இருந்தாலும் சாதாரண மக்கள் பிரதிநிதிகளின் தெரிவு தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

அதேபோன்று, தற்போது நடைமுறையிலுள்ள பெண் பிரதிநிதித்துவத்துக்கான கோட்டாக்களை குறைப்பதற்கு தொடர்பில் கவனம் செலுத்தப் பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. அது நாட்டிலுள்ள 52 சதவீதமான பெண்களின் அரசியல் உரிமையை பறிக்கும் வகையிலான செயற்பாடாகும். அதேபோன்று, அவர்களுக்கு வழங்கப்பட்ட அரசியல் உரிமையை மீண்டும் பெற்றுக்கொள்ளும் வகையிலான செயற்பாடு என்பதுடன் இலங்கையின் அரசியல் வரலாற்றில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்குரிய வாய்ப்பை பறித்தெடுக்கும் வகையிலான செயற்பாடாகும்.

ஆகவே, உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பிலான அடுத்த திருத்தங்களின்போது மக்கள் அபிப்பிராயத்துக்கு ஏற்ற பிரதிநிதித்துவ முறையொன்று கிடைக்கும் வகையில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறும், பெண்களுக்கு பெற்றுக்கொடுக்கபட்டுள்ள 25 சதவீத பிரதிநிதித்துவத்தை பாதுகாக்குமாறும், இளைஞர், யுவதிகளுக்கு ஏற்றவகையிலான பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொடுக்கும் வகையில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

# கிழக்கில் சிங்களவர்களுக்கு காணிகள் பெற்றுக்கொடுப்பதாக தவறான பிரசாரம்

## சாணக்கியன் எம்.பியின் கருத்துக்கு ஆளுநர் அனுராதா பதில்



*(கிண்ணியா நிருபர்)*

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணிகள் சிங்களவர்களுக்கே பகிர்ந்தளிக்கப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டானது சிங்கள மற்றும் தமிழர்கள் மத்தியில் மீண்டும் கலவரத்தை ஏற்படுத்தும் வகையிலானது - என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2021 டிசம்பர் 31ஆம் திகதிமுதல் 37 ஆயிரத்து 150 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளதாகவும் அதில் 82 சிங்களக் குடும்பங்கள் எனவும் மாகாண காணி ஆணையாளர் அலுவலக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மீதி 36 ஆயிரத்து 958 தமிழ்க் குடும்பங்களாகும். அத்துடன் மீள்குடியேற்றப்பட்ட முஸ்லிம் குடும்பங்களின் எண்ணிக்கை 110 ஆகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்படுவதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் முன்வைத்த குற்றச்சாட்டை நான் முற்றாக நிராகரிக்கின்றேன். கிழக்கு மாகாணத்தின் அப்பாவி மக்கள் 30 வருடகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எமது மாகாணத்திலுள்ள பல தமிழ் கிராமங்களுக்கு நான் சென்றுள்ளேன். அந்த நாடாளுமன்ற உறுப்பினர் வராத கிராமங்களுக்கும் சென்றுள்ளேன். மிகவும் சகோதரத்துவமாக வாழ்ந்து வருகின்றார்கள். கிழக்கு மாகாணத்தில் யுத்தம் காரணமாக காணிகளை இழந்தவர்கள் மற்றும் பல்வேறு சமூக அநீதிகளுக்கு உள்ளானவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக ஆணைக்குழுவொன்றை நியமித்தோம். அந்த ஆணையகத்தின் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை பிரதேச செயலக மட்டத்தில் அமுல்படுத்தும் பணியை நாம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம். இந்த ஆணைக்குழு தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தினோம்.

இந்த வேலைத்திட்டம் தற்போது மிகவும் வெற்றிகரமாக அமுல்படுத்தப் பட்டு வருகின்றது. இதனை தாங்கிக்கொள்ள முடியாத காரணத்தினால்தான் பல வருடங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றம் சென்று தமிழ் மக்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என இந்த நாடாளுமன்ற உறுப்பினர் கூச்சலிடுகின்றார். இப்பிரச்சினைகள் தீர்க்கப்படும் போது தமிழ் மக்களும் எம்முடன் இணைந்துவிடுவார்களோ என்ற அச்சம் தற்போது ஏற்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் நாங்கள் சிங்களவர்களா, தமிழர்களா, முஸ்லிம்களா என்று பார்க்காமல் அனைவரும் இலங்கையர்கள் என்றே நினைக்கிறோம். அப்படி ஒரு பிரிவினையை உருவாக்க நாங்கள் ஒருபோதும் முயற்சிக்கவில்லை, அவ்வாறு செய்ய மாட்டோம்

கிழக்கு மாகாணத்தை மீண்டும் ஈழத்தின் அபிலாஷைகளுக்கு இழுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறானதொரு இடத்திற்கு இந்த நாட்டைத் தள்ள வேண்டாம் என இந்த நாடாளுமன்ற உறுப்பினரிடம் நான் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். தமிழ், சிங்கள மக்களுக்கு இடையில் மீண்டும் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக தமிழ் மக்களிடையே மனிதாபிமானமற்ற கனவுகளை உருவாக்க வேண்டாம் என நான் இந்த நாடாளுமன்ற உறுப்பினரிடம் நான் மிகவும் வேண்டிக்கொள்கின்றேன் என்ற நம்பிக்கையில் அவர் தொடர்ந்தும் இவ்வாறான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றார் - என்றார்.


**2022 தேருநர் (வாக்காளர்) இடாப்பு கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

2022 ஆம் ஆண்டிற்கான வாக்காளர்கள் கணக்கெடுப்பு 2022.02.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து வீடுகளுக்கும் கணக்கெடுப்புப் படிவங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.

2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படாதிருப்பின் அல்லது 2021 ஆம் ஆண்டில் பதிவு தொடர்பான முகவரியில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் ; 2004.01.31 அல்லது அதற்கு முன்னர் பிறந்த நபர்களை பதிவு செய்துகொள்வதற்காக

மற்றும்

**18 வயது பூர்த்தியடைந்தவுடனேயே 04 மாதங்களுக்கொரு முறை குறைநிரப்பு இடாப்பு ஊடாக வாக்குரிமையை**

பெற்றுக்கொள்வதற்காக 16 - 18 வயதுகளுக்கிடைப்பட்ட (2006.01.31 இற்கு முன்னர் பிறந்த) பிரஜைகளைப் பதிவு செய்து கொள்வதற்காக கிராம அலுவலரைத் தொடர்பு கொள்ளவும்.

**தேர்தல் ஆணைக்குழு**
011-2868441 / www.elections.gov.lk









பொதுச் சேவை ஆணைக்குழுவால் வழங்கப்படும் பதவி உயர்வுகளை உடன் நடைமுறைப்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குடும்ப நல தாதியர் சங்கத்தினால் சுகாதார அமைச்சுக்கு முன்பாக நேற்று (31) பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

நாட்டில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், இயன்றளவு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பில் நேற்று உரையாற்றிய பிரதமர் இதனைக் கூறியுள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

இது அரசியல் செய்வதற்குரிய நேரம் அல்ல. தேசத்தின் முன்னேற்றத்திற்காக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் சர்வகட்சி மாநாட்டை புறக்கணித்த அனைத்து தரப்பினரும் அடுத்த அமர்வில் கலந்துகொள்ளவேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

"சித்திரை புத்தாண்டு நெருங்கி வருவதால், அடுத்த சில நாட்களில் எரிபொருள் மற்றும் உணவு தீர்ந்துவிடுமென்று பொய்யான அச்சத்தை உருவாக்க வேண்டாம்" என்று பிரதமர் வலியுறுத்தியுள்ளார். அரசாங்கம் கொரோனா வைரஸ் தொற்றுநோயை உருவாக்கவில்லை என பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் சில பிரச்சினைகளுக்கு அரசாங்கமே காரணம் எனக் கூறி சிலர் பொதுமக்களிடம் செல்வாக்கு செலுத்தி வருவதாக பிரதமர் மேலும் தெரிவித்தார்.

பொதுமக்கள் எதிர்நோக்கும் பாரிய அசௌகரியங்களை அரசாங்கம் அறிந்துள்ளதாகத் தெரிவித்த பிரதமர், இயன்றளவு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறியுள்ளார்.

அதேவேளை, நாளைமுதல் 15 மணித்தியாலங்கள் மின் விநியோகத் தடையை நடைமுறைப்படுத்தும் சாத்தியம் அதிகம் காணப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாடு வரலாறு காணாத நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. இதற்கு இந்த அரசே முழுப்பொறுப்பு.

தற்போதைய எரிசக்தி நெருக்கடிக்கு தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் சார்ந்த தீர்வுகள் குறித்து நாம் பல தரப்புடனும் கலந்தாலோசித்து வருகின்றோம்.

இந்த அரசின் ஆட்சி தொடர்ந்தால் இலங்கை மீண்டெழ முடியாது. எனவே, இந்த அரசு கூண்டோடு பதவி விலகவேண்டும். அப்போதுதான் ஆட்சியை நாம் பொறுப்பேற்க முடியும்.

எங்கள் கைகளில் ஆட்சி அதிகாரம் கிடைத்தால் நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டுசெல்வோம்" எனவும் இதன்போது தெரிவித்துள்ளார்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையினை அடுத்து எதிர்வரும் சில தினங்களுக்குள் நாட்டை மூடுமாறு

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஏப்ரல் 01ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# வரப்போகும் பெரும் விளைவுகள்

அரசாங்கத்திடம் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் மின்வெட்டு காரணமாக பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், தொடர் மின் வெட்டு காரணமாக வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளில் அந்நிய செலாவணி கையிருப்பு 70 வீதம் குறைந்துள்ளது. பெப்ரவரி நிலைவரப்படி இது 2.31 பில்லியன் டொலர்களாக குறைந்துள்ளது. இதனால் உணவு மற்றும் எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதிசெய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தீவிரமடையும் பொருளாதார நெருக்கடியால், அந்நிய செலாவணி பற்றாக்குறையால் எரிபொருள் ஏற்றுமதிக்கு அரசாங்கத்தால் பணம் செலுத்த முடியாமல் போனதன் காரணமாக, இலங்கை நீண்டநேர மின்வெட்டை சந்தித்து வருகிறது.

தவறான நேரத்தில் வரி குறைப்பு, கொரோனாவால் சுற்றுலாத்துறை பாதிப்பு, பலவீனமான அரச நிதி ஆகியவை காரணமாக இலங்கை மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. இதிலிருந்து மீண்டு வர இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் (IMF) உதவி கோரியுள்ளது. இலங்கை பங்குகள் 70 வீதத்திற்கும் அதிகமாக வீழ்ச்சியடைந்ததால், பங்குச்சந்தை இரண்டு முறை வர்த்தகத்தை நிறுத்த வழிவகுத்தது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் அந்நிய செலாவணி கையிருப்பு 70 வீதமாக குறைந்துள்ளது. பெப்ரவரி நிலைவரப்படி அது 2.31 பில்லியன் டொலர்களாக குறைந்துள்ளது. இதனால் உணவு மற்றும் எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்கவின் தகவலின்படி, "37,000 தொன் டீசல் ஏற்றுமதிக்கு அரசாங்கத்தால் 52 மில்லியன் டொலர் செலுத்த முடியாததே இந்த மின்வெட்டுக்கு காரணமாகும். தற்போது மிகவும் வறட்சியான காலம் என்பதால், நீர்மின் நிலையங்களிலும் குறைந்த அளவிலே நீர் இருப்பு உள்ளதால், அதன் மூலம் நடைபெறும் மின்சார உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போதைய நெருக்கடியை சமாளிக்க, நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்த அடுத்த மாதம் வொஷிங்டன் செல்லவுள்ளார். இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவியை பெற்றால், அது உலகளாவிய கடன் வழங்குநரிடமிருந்து இலங்கை 17ஆவது முறையாக பெறும் நிதி மீட்புப் பாதியாகும். மோசமடைந்துவரும் மின்சார நிலைமை ஏற்கனவே போராடிவரும் வர்த்தகத்தை மேலும் பாதிக்கும். இது, இலங்கையின் வளர்ச்சியை பாதிப்பதோடு மட்டுமன்றி, கையிருப்புகளை மேம்படுத்துவதற்கும், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கும், அத்தியாவசிய இறக்குமதிகளுக்குச் செலுத்துவதற்கும் முக்கியமான ஆதாரமான அந்நியச் செலாவணி வருமானத்திற்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தும்.

2021 நிதியாண்டின் நான்காம் காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் எதிர்பார்த்ததை விட 1.8 வீதம் குறைவாக இருந்தது. முழு ஆண்டு வளர்ச்சியே 3.7 வீதமாக இருந்ததாக அரச தரவுகள் தெரிவிக்கின்றன. இப்போதுள்ள நிலைமை மேலும் சில வாரங்களுக்கு நீடித்தால் நாடு உத்தியோகபூர்வமாகவே வங்குரோத்து நிலைமைக்கு சென்றுவிடும்.

கடந்த சில நாட்களாக ஆங்காங்கே ஆர்ப்பாட்டம் செய்துவந்த மக்கள் அடுத்தடுத்த வாரங்களில் வீதிக்கு இறங்கும் தீர்மானத்திற்கு வந்துள்ளனர். இது அவ்வளவு நல்ல விடயமல்ல. உணர்ச்சிபூர்வமாக ஆவேசத்துடன் மக்கள் வீதிக்கு இறங்குவதால் பெரிதான மாற்றம் வந்துவிடாது. ஆனால், மக்களுக்கு தமது எதிர்ப்பினை வெளியிட வேறு வழிகளும் இல்லை. இலங்கையின் இந்த நிலைமைக்கு உடனடி பரிகாரம் தேடாவிடின் பெரும் விளைவுகள் வரலாமென்பதையே கூறிவைக்க முடியும்.

# கடன் சூழலில் இலங்கை!

*(இலங்கையின் பொருளாதார நெருக்கடி குறித்து தமிழகத்திலிருந்து வெளியாகும் தினமணி நாளிதழின் ஆசிரியர் தலையங்கம்.)*

கடல் வளமும், இயற்கை வளமும் மிகுந்த இலங்கைத் தீவு, அந்நாட்டு ஆட்சியாளர்களின் தவறான கொள்கைகளால் தற்போது கடும் பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்திருக்கிறது. 2.2 கோடி மக்கள்தொகை கொண்ட இலங்கை , உலகப் பொருளாதார நிபுணர்களின் கருத்துப்படி வங்குரோத்து நிலையை நோக்கி விரைந்துகொண்டிருக்கிறது.

நிலக்கரி வாங்க நிதி இல்லாததால் அங்கு தினசரி அதிகபட்சம் 10 மணிநேர மின்வெட்டு தொடர்கதையாகிவிட்டது. அந்நிய செலாவணி இருப்புக் குறைவால் எரிபொருள் இறக்குமதி குறைந்து, பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு பற்றாக்குறையுடன், அவற்றின் விலை பல மடங்கு உயர்ந்திருக்கிறது. உணவுப் பொருட்களின் விலை உயர்வாலும் தட்டுப்பாட்டாலும், பெரும்பாலான குடும்பங்கள் இருவேளை உணவு முறைக்கு மாறும் அளவிற்கு மக்கள் அல்லாடுகின்றனர்.

அதுமட்டுமல்ல, உலக நாடுகளிடம் வாங்கிய பல பில்லியன் டொலர் கடன் சுமையால் இலங்கை தள்ளாடுகிறது. கடனைத் திருப்பித் தர முடியாமலும், அன்றாடச் செலவுகளுக்கு மீண்டும் அந்நியக் கடனை வாங்கவேண்டிய நிலையிலும் இலங்கை தத்தளிக்கிறது.






பெப்ரவரி 2022 நிலைவரப்படி இலங்கை வெளிநாடுகளில் வாங்கியுள்ள கடனின் அளவு 51 பில்லியன் டொலர் (இலங்கை ரூபா மதிப்பில் ரூ.14.3 இலட்சம் கோடி). இதில் உடனடியாக திருப்பிக் கொடுத்தாக வேண்டிய கடனின் மதிப்பு 7 பில்லியன் டொலர். ஆனால், அந்நிய செலாவணிக் கையிருப்பு 2 பில்லியன் டொலர் மட்டுமே இருக்கிறது. அதுவும் அன்றாட இறக்குமதிக்கு அளிக்கவே போதவில்லை.

இந்த நிலை திடீரென ஏற்பட்டு விடவில்லை. கடந்த 2019ஆம் ஆண்டிலிருந்தே ஆட்சியாளர்களின் தவறான கொள்கை முடிவுகளால் இலங்கை பொருளாதாரம் சரிவை நோக்கிச் செல்லத் தொடங்கிவிட்டது. கடந்த இரண்டாண்டுகால கொரோனா பொதுமுடக்கம் இந்த வீழ்ச்சியை மேலும் விரைவுபடுத்திவிட்டது.

2019இல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொண்ட சில முக்கிய முடிவுகளே இன்றைய நிலைக்குக் காரணம் என்று வல்லுநர்கள் கூறுகின்றனர். முதலாவதாக, நாட்டின் வரிவிதிப்பு முறையில் மாற்றம் செய்த ஜனாதிபதி , 15 வீத வரியை 8 வீதமாக குறைத்தார். இதனால் அரசின் வரி வருவாய் குறையத் தொடங்கியது. அதேசமயம், அரசதுறையில் ஒரு இலட்சம் புதிய வேலைகளை அவர் உருவாக்கினார். அதனால் அரசின் செலவினம் அதிகரித்தது.

போதிய ஆய்வின்றி இயற்கை விவசாயத்தை அரசு நடைமுறைப்படுத்தியதால், இலங்கைக்கே உரித்தான தேயிலை, மிளகு, ஏலம், காய்கறி உற்பத்தியில் சுமார் 30 வீத சரிவு ஏற்பட்டது. அதேசமயம், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 வீத பங்களிக்கும் சுற்றுலாத்துறையும் கொரோனா நோய்த்தொற்றால் கடும் வீழ்ச்சியடைந்தது. 2019இல் 7.5 பில்லியன் டொலராக இருந்த சுற்றுலா வருவாய், 2021இல் 2.8 பில்லியன் டொலராகக் குறைந்தது.

இந்த நிலையிலும், கடந்த நிதியாண்டில் இராணுவத்துக்கு 1.62 பில்லியன் டொலர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

கொரோனா தொற்றுப் பரவலால் விவசாய விளைபொருள், ஆயத்த ஆடை ஏற்றுமதியும் சரிவு கண்ட நிலையில், நாட்டின் வர்த்தகப் பற்றாக்குறை 2021இல் 6 பில்லியன் டொலராக அதிகரித்தது. அதேபோல், நாட்டின் நிதிப் பற்றாக்குறை 2020இல் 5 வீதமாக இருந்தது, 2022இல் 15 வீதமாக ஆக அதிகரித்தது. இந்த பொருளாதாரச் சரிவால், அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் மதிப்பு 280.42 (மார்ச் நிலைவரம்) ஆக வீழ்ந்தது. இது நாட்டின் பொருளாதார நிலையை மேலும் பாதித்தது. 2021 நிதியாண்டின் மூன்றாவது காலாண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மைனஸ் 1.5 வீதமாக இருந்தது.

இவையெல்லாம் போதாதென்று, அம்பாந்தோட்டை துறைமுகம், சர்வதேச டு விமான நிலையம் போன்ற பிரம்மாண்டமான திட்டங்களில் அளவுக்கு மீறி முதலீடு செய்தது இலங்கை அரசு. இதில் ஊழல் முறைகேடு குறித்த புகார்களும் உண்டு. இந்த முதலீடுகளுக்கு சீனாவின் கடனுதவியை இலங்கை சார்ந்திருந்தது. அந்நாட்டுக்கு திருப்பிச் செலுத்த வேண்டிய கடனை செலுத்த முடியாததால், பல அரசு சொத்துகளை சீனாவுக்கு குத்தகைக்கு விடும் நிலை தற்போது இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடனில் சீனா 10 வீத பங்கு வகிக்கிறது; அந்நாடு கந்துவட்டிக்காரர் போலவே உலகிலுள்ள ஏழை நாடுகளை கடன் வலையில் வீழ்த்தி வருகிறது.

இவை அனைத்துக்கும் மேலாக, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை கருத்திற்கொள்ளாமல், அதிகளவிலான நாணயத்தாள்களை அச்சிட்டது இலங்கை அரசு. கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 3 இலட்சம் கோடி இலங்கை ரூபா அச்சிடப்பட்டுள்ளது. நாட்டின் உற்பத்தி - வருவாயைக் கணக்கிற்கொள்ளாமல் செயற்கையாக கரன்சியைப் பெருக்கியதன் விளைவாக, நாட்டில் பணவீக்கம் அதிகரித்தது.

2022 பெப்ரவரி நிலைவரப்படி இலங்கையின் பணவீக்கம் 17.5 வீதமாக இருந்தது. இதுவே உச்சபட்ச விலைவாசி உயர்வுக்கு வழிவகுத்திருக்கிறது.

கடந்த ஒரு மாதமாக நடைபெறும் உக்ரைன் - ரஷ்யப் போரால், கோதுமை, சமையல் எண்ணெய்க்கு அந்நாடுகளைப் பெருமளவில் சார்ந்திருக்கும் இலங்கை கடும் பாதிப்பைச் சந்தித்துள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பொறுத்தவரை இறக்குமதியைச் சார்ந்திருக்கக்கூடாது என்ற அடிப்படை உண்மையை அந்நாடு இப்போது உணர்ந்திருக்கிறது. வெளிநாட்டுக் கடன்களையே இலங்கை நம்பியிருப்பது நாட்டின் எதிர்காலத்தைக் கேள்விக்குள்ளாக்கி இருக்கிறது.

## தவக்கால சிந்தனை




### "எங்களுக்குக் கண் தெரிகிறது....."

நீங்கள் பாவிகளாகவே இருக்கிறீர்கள். கண் இருந்தால் மட்டும் போதாது. பார்வை பெற கண்ணில் ஒளி இருக்கவேண்டும். பார்க்கும் பொருளிலும் ஒளி பட்டு பிரதிபலிக்க வேண்டும். இயேசு என்னும் ஒளி, கண்ணின் ஒளியாகவும் பார்க்கும் பொருளின் ஒளியாகவும் இருக்கவேண்டும். அப்பொழுது, பார்க்கும் பொருளின் உண்மைப் பொருளை உணர முடியும். அந்த பரிசேயர்களுக்கு கண் இருந்தது. கண்ணில் ஒளி இருந்தது. ஆனால், இயேசு என்னும் உன்னத ஒளி அவர்களில் இல்லை. எனவேதான், பார்த்தார்கள். ஆனால், தவறாகப் பார்த்தார்கள். பார்வையற்றிருந்த ஒருவர் இன்று பார்வையோடு இருப்பதை ஏற்றுக்கொள்ள பார்வை அவர்களுக்கு இல்லை.

"உங்கள் மகன் இவன்தானா?" என்று கேட்கும் அளவுக்கு அவர்களின் பார்வை தடைபெற்றிருந்தது. பாவத்தில் இருக்கும் மனிதனின் பார்வையும் தடைப்படுகிறது. தீய சிந்தனை, தீய செயல்பாடுகள் உள்ள மனிதனின் பார்வை மங்கிவிடுகிறது. இதயம் சுருங்கி, உண்மையையும் யதார்த்தத்தையும் ஏற்றுக்கொள்ளும் அகக்கண் புறையுற்று, பார்வையைப் பாதித்துவிடுகிறது. பார்வைக்கும் பாவத்திற்கும் நெருக்கம் அதிகம். புனித பார்வையில் சரியானதை, உண்மையை காண்போம். அங்கு கடவுளின் மாட்சியைக் காணலாம்.

## நக்கல் நமசிவாயம்

**கரண்ட் இல்லாமல் ஒரு மணி நேரம் இருக்க முடியேல்ல... சண்டைக்காலத்தில வடக்குச் சனம் என்ன பாடுபட்டிருக்கும்...**



## இன்றைய நாளில்...

★ 1935 – இந்திய ரிசர்வ் வங்கி ஆரம்பிக்கப்பட்டது.

★ 1958 – இலங்கை இனக்கலவரம், 1958: கொழும்பு நகரில் தமிழில் எழுதப்பட்ட 'பெயர்ப்பலகைகள் மீது தார் பூசப்பட்டன.

★ 1960 – டிரோஸ் -1 என்ற செயற்கைக்கோள் முதலாவது விண்வெளியில் இருந்து முதலாவது தொலைக்காட்சிப் படிமத்தை பூமிக்கு அனுப்பியது.

★ 1976 – ஆப்பிள் நிறுவனம் ஸ்ரீவ் ஜொப்ஸ், ஸ்டீவ் வாஸ்னியாக், ரொனால்ட் வைன் ஆகியோரால் கலிபோர்னியாவில் தொடங்கப்பட்டது.

★ 1981 – சோவியத் ஒன்றியத்தில் பகலொளி சேமிப்பு நேரம் முதல் தடவையாக அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1997 – ஏல்-பாப் வால்வெள்ளி பூமியின் சுற்றுப்பாதை வீச்சைக் கடந்தது.

★ 2001 – நெதர்லாந்து ஒருபால் திருமணத்தை சட்டபூர்வமாக்கிய முதலாவது நாடானது.

★ 2004 – கூகுள் நிறுவனம் ஜிமெயில் என்ற இலவச மின்னஞ்சல் சேவையை பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தியது.

# தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் பிச்சைக்காரர்கள் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் அதிரடிப் பேச்சு

## அடுத்த தேர்தலுக்கான ஆயத்தம் குறித்தே சிந்திப்பதாகவும் தெரிவிப்பு

தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் பிச்சைக்காரர்கள். அனைவரும் திருத்தப்பட வேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் ஸ்ரீசற்குணராஜா தெரிவித்தார்.

தந்தை செல்வாவின் 124ஆவது ஜனன தின நிகழ்வு யாழ். மத்திய கல்லூரி தந்தை செல்வா கலையரங்கில் நேற்று நடைபெற்றபோது அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் பிச்சைக்காரர்கள். கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விதவைகள் காணப்படுகின்றார்கள். ஆனால் எமது அரசியல்வாதிகளிடம் அவர்களுக்கு உதவுவதற்கு எந்தவொரு திட்டமும் இல்லை. நிகழ்ச்சி நிரலும் இல்லை.

அடுத்த மாகாண சபைத் தேர்தலுக்கு எவ்வாறு செயற்படுவது தொடர்பில் செயற்படுகிறார்களே தவிர, தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்காக செயற்படவில்லை.

எங்களிடம் ஒரு நிகழ்ச்சி நிரல் இல்லை, ஒரு திட்டமிடல் இல்லை, ஏதாவது ஒரு சம்பவம் என்றால் முதல் நாள் கூட்டத்தைக் கூட்டி ஓர் அறிக்கையைத் தயாரித்து அதை வாசித்துவிட்டு செல்வது தான் தற்போதுள்ள நிலைமை. அது மாற்றியமைக்கப்பட வேண்டும்.

குறிப்பாக வடக்கு, கிழக்கை மனதளவில் ஒற்றுமையாக்க வேண்டும். அத்தோடு வட, கிழக்கை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம், எவ்வாறு முன்னேற்றலாம். அதற்கென்று ஒரு நிகழ்ச்சி நிரல், ஒரு திட்டமிடல் எங்களிடம் இல்லை.

நாங்கள் தோற்கடிக்கப்பட்டவர்களாக இருக்கலாம். ஆனால், தொடர்ந்தும் அவ்வாறே இருக்கத் தேவையில்லை. எமக்கென்று ஒரு பாரம்பரியம் உள்ளது.

ஏனைய உலக நாடுகளில் அந்த நாடுகளின் தயாரிப்புகளில் அந்த நாடுகளின் பெயர்கள் குறிப்பிடப்படும். ஆனால், யாழ்ப்பாண தயாரிப்பு என்று ஏதாவது உள்ளதா? அரசியல்வாதிகள் யாராவது எதையாவது சுட்டிக்காட்டுகிறார்களா? இல்லை. உதாரணமாக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு திருமுருகன் எவ்வளவு சமூகப்



பணி செய்கின்றார்.

ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர்களால் அவ்வளவு விடயத்தினை செய்ய முடிந்ததா? இல்லை. அவர் எந்த ஓர் அரசியல் தலையீடும் இன்றி தன்னிச்சையாக பல சமூக செயற்பாடுகளை முன்னெடுக்கும் நிலையில், எந்த ஒரு செயற்பாடும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களால் இன்று வரை செயற்படுத்தப்படவில்லை.

இந்த மார்ச் மாதமானது, மகளிர் தினத்துக்குரிய மாதம் அந்த மகளிர் தின மாதத்தில் அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள் ஏதாவது தேவைப்படும் மக்களுக்கு உதவி செய்யலாம்.

அத்தோடு இந்த அரசியல்வாதிகள் முதலில் தமக்குரிய அரச வீடு, சொகுசு வாகனம், சொகுசு வாழ்க்கை அனைத்தையும் தவிர்த்து மக்களோடு மக்களாக இருந்து வாழ்வதன் மூலமே மக்களுடைய பிரச்சினைகள் தெரியும்.

தற்பொழுது தந்தை செல்வா அறக் கட்டளை நிதியம் சில செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது. அது மிகவும் வரவேற்கத்தக்க விடயம். அவர்கள் அதனை தொடர்ச்சியாக செயற்படுத்த வேண்டும். தந்தை செல்வாவின் நோக்குதான் தமிழ் மக்களை உலகத்துக்கு காட்டியது. எமக்கு ஒரு கலை கலாசாரம் உள்ளது. எமக்கு ஒரு மொழி உள்ளது என்பதை உலக நாடுகளுக்கு காண்பித்தது தந்தை செல்வாவின் செயற்பாடுகளே.

தற்பொழுது தமிழ் அரசியல்வாதிகளையும் கொழும்பில் இருந்து இறக்குமதி செய்கிறார்கள். அதாவது வடக்கில் ஆட்கள் இல்லை என்று கொழும்பில் இருந்து அரசியலுக்கு ஆட்களை இறக்குகிறார்கள். இதெல்லாம் திருத்தப்பட வேண்டிய விடயம்.

இந்திய நாட்டைப் பார்த்தால் எத்தனையோ மொழிகள், எத்தனையோ இன மக்கள் உள்ளார்கள். ஆனால் அவர்கள் இன்று உலக நாடுகளில் தலைசிறந்து விளங்குகின்றார்கள். அதற்கு காரணம் சிறந்த அரசியல் யாப்பை உருவாக்கியதே காரணம்.

ஆனால், நமது அரசியல்வாதிகள் அரசியல் யாப்பை உருவாக்குவது தொடர்பில் சிந்திக்கவில்லை. இன்றும் 13 ,13+, சமஷ்டி என்று தமக்குள்ளே கருத்து முரண்பாடே தவிர செயற்படுத்த முடியவில்லை.

தமிழ் மக்களின் தந்தை என போற்றப்படும் தந்தை செல்வநாயகம் தமிழ் மக்களால் மட்டுமல்ல, இலங்கையில் உள்ள அனைவராலும் அனைத்து இன மக்களாலும் போற்றப்பட்டவர்.

அவரது வாழ்க்கை முறை மிகவும் வித்தியாசமானது. அவர் மிகவும் மென்மையானவர். அரசியலுக்கு வந்த பின்னரும் அவர் சிறந்து மென்மையான போக்குடன் செயற்பட்டதன் காரணமாக அவரை அனைவரும் மதித்து செயற்பட்டார்கள் என்றார்.

# மிருகக்காட்சிசாலை திணைக்களத்துக்கு புதிய பணிப்பாளராக பிரேமகாந்த நியமனம்

தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களத்திற்கான புதிய பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே பணிப்பாளராக கடமையாற்றிய ஷர்மிலா ராஜபக்ஷ குறித்த பதவியில் இருந்து நீக்கப்பட்டதையடுத்து, ஏற்பட்ட வெற்றிடத்திற்காக திலக் பிரேமகாந்த நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சி.பி.ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானத்திற்கமைய மிருகக்காட்சிசாலை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவியில் இருந்து விலகியதாக ஷர்மிலா ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

ஷர்மிலா ராஜபக்ஷ கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 28ஆம் திகதி குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். அதன்பின்னர் தெஹிவளை மிருகக்காட்சிசாலையின் தொழிற்சங்கத்தினருக்கும் அவருக்கும் தொடர்ச்சியாக முரண்பாடுகள் ஏற்பட்ட நிலையில் அவரை பதவி விலக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்கிசை – காங்கேசன்துறை ரயில் சேவைகள் ஏப்.08 முதல்

எதிர்வரும் 8ஆம் திகதி கொழும்பு கல்கிசை- காங்கேசன்துறை இடையிலான ரயில் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன்படி கல்கிசையில் இருந்து இரவு 10 மணிக்கு ஆரம்பிக்கும் ரயில் வவுனியாவை அதிகாலை 3.15 மணிக்கும், கிளிநொச்சியை 4.25 மணிக்கும் யாழ்ப்பாணத்தை 5.28 மணிக்கும் காங்கேசன்துறை 5.54 மணிக்கும் வந்தடையும் என கூறப்படுகின்றது.

அதன் பின்னர், ஞாயிற்றுக்கிழமை 10ஆம் திகதி இரவு 10 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்தை 10.24 மணிக்கும் கிளிநொச்சியை 11.29 மணிக்கும் வவுனியாவை 12.38 மணிக்கும் மருதானையை 5.20 மணிக்கும் கல்கிசையை 5.54 மணிக்கும் புகையிரதம் சென்றடையும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கலாபூஷண விருது பெற்றார் பொன்மனச் செம்மல் எம்.எஸ். தாஜ்மஹான்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 37ஆவது கலாபூஷண அரச விருது வழங்கும் விழா கொழும்பு - 07, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று (31) வியாழக்கிழமை நடைபெற்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில், கலைஞரும் பொன்தமிழ் கவிஞருமான இலங்கைப் பொன்மனச் செம்மல் எம்.எஸ். தாஜ்மஹான் கலாபூஷணம் விருது வழங்கி, பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

நேத்ரா தொலைக்காட்சியின் தமிழ்ப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் எம்.எஸ். விஸ்வநாதன் உட்பட கலாசார அலுவல்கள் திணைக்கள குழுவினரிடமிருந்து கலாபூஷண விருதை அவர் பெற்றுக்கொண்டார்.

# இரத்மலானை விமான நிலையம் மூடப்பட்டது



பயணிகள் இல்லாமை காரணமாக அண்மையில் திறந்துவைக்கப்பட்ட இரத்மலானை விமான நிலையம் மூடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச விமான நிலையமாக அண்மையில் திறந்து வைக்கப்பட்ட இலங்கையின் பழமையான விமான நிலையமான இரத்மலானை விமான நிலையத்திற்கு மாலைதீவுகளுக்குச் சொந்தமான விமானம் முதலாவது பயணமாக பயணிகளுடன் தரையிறங்கியது.

விமானம், விமான நிலையத்தில் தரையிறங்கி 96 மணி நேரங்கள் கடந்த பின்னரும் பயணிகள் எவரும் இல்லாத காரணத்தினால், இரத்மலானைக்கான தனது சேவையை இடைநிறுத்தியுள்ளது.

கட்டுநாயக்க மற்றும் மத்தல ஆகிய இரண்டு சர்வதேச விமான நிலையங்கள் இருக்கும் நிலையில், மற்றுமொரு சர்வதேச விமான நிலையமாக இரத்மலானை விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டது. அந்த திறப்பு விழாவுக்காக மாத்திரம் ஆறு மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இரத்மலானை விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக கடந்த 27 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டதுடன் மாலைதீவின் மோல்டிவியன் விமான சேவையின் விமானம் மாலைதீவு பிரஜைகளை ஏற்றிக்கொண்டு முதலில் விமான நிலையத்தில் தரையிறங்கிய விமானமாகும்.

இந்தப் பயணிகளின் பின்னர் மாலைதீவில் இருந்து இரத்மலானைக்கோ, இரத்மலானையில் இருந்து மாலைதீவுக்கோ செல்ல பயணிகள் எவரும் இல்லாத காரணத்தினால், அந்த விமான சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

# பிளாஸ்ரிக் பாவனையை குறைக்க விசேட திட்டம்

பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையை குறைப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பதிப்பான நூல் ஒன்றின் வெளியீட்டு நிகழ்வு அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துவெளியிடும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மீள்சுழற்சி செய்யக்கூடிய பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் வகைகள் 8 வீதமானவர்களினால் மாத்திரம் உபயோகப்படுத்தப்படுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலித்தீனினால் வன சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளை கட்டுப்படுத்துவதற்கு, உரிய சட்ட நடைமுறைகள் அமுல்படுத்தப்பட வேண்டுமென அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 31.03.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 104 8464 | 115 2287 |
| கனேடியன் டொலர் | 12 7 41 | 13 866 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 34 2420 | 36 356 |
| யூரோ | 214 6172 | 226 736 |
| ஜப்பான் யென் | 1 2566 | 1 3576 |
| சிங்கப்பூர் டொலர் | 103 1486 | 111 3337 |
| ஸ்ரேலிங் பவுன் | 268 7301 | 283 127 |
| சுவிஸ் பிராங்க் | 202 607 | 214 887 |
| ஐ.அ.டொலர் | 177 6364 | 187 8847 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 682 187 |
| குவைட் | குவைட் தினார் | 873 2510 |
| ஓமான் | ஓமான் றியால் | 665 5022 |
| கட்டார் | கட்டார் றியால் | 70 7170 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 68 5861 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 70 3 26 |

# நீண்டகாலமாக சைக்கிள் திருட்டில் ஈடுபட்டுவந்த இளைஞர் கைது

## சந்தேக நபரிடமிருந்து 15 சைக்கிள்கள் மீட்பு

(பாறூக் ஷிஹான்)



நீண்ட காலமாக சைக்கிள் திருட்டில் ஈடுபட்டு வந்த இளைஞனை காரைதீவு பொலிஸார் நேற்று (31) கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது, மருதமுனை, காரைதீவு, சம்மாந்துறை உள்ளிட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக துவிச்சக்கர வண்டிகள் களவாடப்பட்டு வருவதாக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இதற்கமைய பொலிஸாரும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு சந்தேக நபர்களை அடையாளம் காணும் முயற்சியில் ஈடுபட்டனர். காரைதீவில் பொலிஸார் நேற்று மதியம் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது சுமார் 22 வயதுடைய இளைஞன் கைதானார்.

இவ்வாறு கைதான இளைஞனை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை காரைதீவு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

பல்வேறு கொள்ளை சம்பவங்களில் தொடர்புடைய குறித்த கைதான சந்தேக நபரிடமிருந்து இதுவரை 15 சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இரசாயன உரங்களை நியாயமான விலையில் விவசாயிகளுக்கு வழங்குக!

## அமைச்சர் மஹிந்தானந்தவிடம் கோரினார் பிரமித்த எம்.பி.



(த.அசோக் குமார் - ஹாலி எல)

யூரியா மற்றும் ஏனைய இரசாயன உரங்களை நியாயமான விலையில் விவசாயிகளுக்கு வழங்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவிடம், நாடாளுமன்ற உறுப்பினர் பிரமித பண்டார தென்னகோன் கோரிக்கை விடுத்துள்ளார்.

விவசாய அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்து நாடாளுமன்ற உறுப்பினர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

விவசாய சமூகம் செறிந்து வாழும் தம்புள்ளை மக்களின் பிரதிநிதி என்ற வகையில் பொறுப்புடன் இந்தக் கோரிக்கையை விடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் பிரமித்த பண்டார தென்னகோன் அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உரம் தொடர்பான பிரச்சினையை விவசாயக் குழுவிலும் பல தடவைகள் முன்வைத்துள்ளதாகவும், இந்தக் கோரிக்கை தொடர்பில் சாதகமான பதில் கிடைக்கும் என நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# எரிவாயுவுக்காக வரிசையில் காத்திருந்த மக்களை தகாத வார்த்தையில் திட்டிய உரிமையாளர்



### கொட்டகலையில் பதற்றம்









(க.கிஷாந்தன்)

சமையல் எரிவாயுவை வாங்குவதற்காக நீண்டநேரம் வரிசையில் காத்திருந்த மக்களை, நாயே என விளித்து, திட்டி, வர்த்தக நிலைய உரிமையாளர் மிகவும் கீழ்த்தரமான முறையில் நடந்து கொண்ட சம்பவமொன்று நேற்று (31) கொட்டகலை நகரில் பதிவானது.

நாட்டில் எரிபொருளுக்கும், சமையல் எரிவாயுவுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இவற்றைப் பெறுவதற்கு நீண்டநேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை மக்களுக்கும், சாரதிகளுக்கும் ஏற்பட்டுள்ளது. கொட்டகலை பகுதியிலும் இந்நிலைமை காணப்படுகின்றது

கொட்டகலை நகரிலுள்ள இரு வர்த்தக நிலையங்கள் ஊடாகவே சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்தி அதிக விலைக்கு லிட்ரோ எரிவாயு விநியோகித்த வர்த்தகர் ஒருவரின் அனுமதிப்பத்திரத்தை லிட்ரோ நிறுவனம் இடைநிறுத்தி வைத்துள்ளது.

இந்நிலையில், மற்றைய வர்த்தக நிலையத்திலுள்ள உரிமையாளர் வாடிக்கையாளர்களை மதித்து நடப்பதில்லை என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தக நிலையத்துக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வந்துள்ளன.

எனினும், சுமார் 50 பேருக்கு மாத்திரமே விநியோகிக்கப்பட்டுள்ளது. ஏனைய சிலிண்டர்கள் பதுக்கிவைக்கப்பட்டுள்ளன. இதனால் சிலர் வீடுகளுக்கு திரும்பினர். சிலர், இதனை எதிர்த்து போராடினர்.

ஏன் இவ்வாறு செயற்படுகின்றீர்கள் என வினவியபோதே, வர்த்தக நிலையத்தின் உரிமையாளர், வாடிக்கையாளர்களை நாயே என விளித்துள்ளார். இதனால் கடுப்பாகி வாடிக்கையாளர்கள் கடும் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதனால் பதற்றமான நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து கொட்டகலை வர்த்தக சங்கத் தலைவர் விஸ்வநாதன் புஷ்பாவும், திம்புள்ள - பத்தனை பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். நிலைமையை சுமுக நிலைக்கு கொண்டுவந்தனர்.

சம்பந்தப்பட்ட உரிமையாளர் வாடிக்கையாளர்களிடம் மன்னிப்பு கோரினார். அதன்பிறகு, சில வாடிக்கையாளர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# மலையகத்திற்கு மற்றுமொரு வைத்தியபீடம் வழங்கப்படும்

## கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவிப்பு

(கண்டி நிருபர்)

மலையகத்திற்கு மற்றுமொரு வைத்தியபீடம் ஊவா - வெல்லஸ்ஸயில் அமைக்கப்படும் என கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

கண்டிக்கு விஜயம் செய்த அவர், அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரை சந்தித்து நல்லாசிகள் பெற்றபின் ஊடகங்களுக்கு இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடதாசி பற்றாக்குறை இன்று ஒரு பிரச்சினையல்ல. பொதுப் பரீட்சைகள் தடையில்லாமல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை திட்டமிட்டபடி நடக்கும். தேவையான கடதாசிகள் கைவசம் உள்ளன.

அதேநேரம் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களுக்கு மத்தியில் உயர்தரப் பரீட்சை நடத்த உதவிய ஆசிரியர்கள், அதிபர்கள் உட்பட சகல தரப்பினருக்கும் நன்றி தெரிவிக்கிறோம்.

கூடிய விரைவில் முடிவுகள் வெளியிடப்படும். பல்கலைக்கழகங்களுக்கு இம்முறை அதிகமானவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர். பத்தாயிரம் பேரளவிலேயே புதிததாக சேர்த்துக் கொள்வதுடன், பல புதிய பீடங்கள் ஆரம்பிக்கப்படும். இவ்வருடம் ஊவா- வெல்லஸ்ஸயில் வைத்திய பீடம் ஒன்று ஆரம்பிக்கப்படும். பல்கலைக் கழகங்களில் நேரடிக்கற்றல் நடவடிக்கைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஏனெனில், பல்கலை என்பது ஒரு பாடசாலையல்ல. அது பரந்த அறிவைப் பெற்றுக்கொள்ளும் சகலகலா நிறுவனம்.

கொரோனா உடல் ரீதியில் ஏற்பட்ட தாக்கம் அல்ல, முழு பொருளாதார கட்டமைப்பையும் பின்னடையச் செய்தது. கொரோனா தொற்று ஓர் இயற்கை நிகழ்வு. எமக்கு மட்டும் அல்ல. முழு உலகத்திற்கும் பிரச்சினையானது. அதன் விளைவாகவே எமது பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. இருப்பினும் எதிர்காலத்தில் சூரியசக்தி மற்றும் காற்று மூலம் மின் உற்பத்திக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இப்படியாக படிப்படியாக நாம் மீட்சி பெறுவோம்.வெளிநாட்டு செலவாணிப் பிரச்சினைக்கு நட்பு நாடுகளை நாடியுள்ளோம். ஐ.எம்.எவ்வின் அங்கத்துவ நாடுகளில் இலங்கையும் ஒன்று. எனவே, தேவைப்படும்போது தொடர்புகொள்வதில் தவறில்லை - என்றார்.

# பலாங்கொடை வைத்தியசாலை கொவிட் விடுதி சாதாரண பிரிவாக மாற்றம்

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை அரசாங்க வைத்தியசாலையில் இதுவரை இயங்கிவந்த கொவிட்-19 விசேட செயற்பாட்டுப் பிரிவு நேற்றுமுதல் நீக்கப்பட்டது.

இப்பிரிவு தற்பொழுது ஆண்களுக்கான விசேட நோயாளர் விடுதியாக மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்தது.

சாதாரண நோயாளர் விடுதியாக நீண்டகாலமாக இயங்கிவந்த இந்த விடுதிக் கட்டடம் நாட்டில் கொவிட்-1 9 தொற்று ஏற்பட்டதையடுத்து இந் நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் விசேட செயற்பாட்டுப் பிரிவாக மாற்றப்பட்டதுடன், இதனால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு சுமார் இரண்டு வருடகாலமாக சேவையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒட்டரி தமிழ் வித்தியாலயத்தில் புலமைப்பரிசிலில் மூவர் சித்தி



(நோட்டன் பிரிட்ஜ் எம்.கிருஸ்ணா )

ஹட்டன் கல்வி வலயம் டிக்கோயா, ஒட்டரி தமிழ் வித்தியாலயத்தில் 2021ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் மூன்று மாணவர்கள் சித்திபெற்றுள்ளனர்.

மகேந்திரராஜ் சமிக்ஷா - 157, கிருஸ்ணகுமார் ருவேதிதா -152, என்டனி ஜூட் மானக்ஷா -150 புள்ளிகளை பெற்று சித்தி பெற்றுள்ளதாக அதிபர் மதியழகன் தெரிவித்தார். வகுப்பாசிரியை எஸ்.சிவனேஸ்வரி மற்றும் சித்திபெற்ற மாணவர்களையும் படத்தில் காணலாம்.

# காட்மோர் தமிழ் வித்தியாலயத்தில் எட்டு மாணவர்கள் சித்தி



**2021ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் ஹட்டன் கல்வி வலயம் காட்மோர் தமிழ் வித்தியாலயத்தில் முதன் முறையாக 8 மாணவர்கள் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர் என அதிபர் மகேந்திரன் தெரிவித்தார்.**

**அதன்படி, யூ.பிரியலோஷன் - 174, டீ.பவீஷ்ணன் - 168, எஸ்.பிரணீஸ் எசான் - 168 எஸ்.ஜானக - 152, எஸ்.மனஷேக் - 150, எஸ்.லக்சிகா - 150 எ.மதுமிதன் - 149, ஜே.சஸ்மித்தா -148 புள்ளிகளை பெற்று சித்தி பெற்றுள்ளனர். (படம் : எம்.கிருஸ்ணா)**

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com



**வன்முறை தீவிரவாதத்தை தடுத்தல் தொடர்பாக கண்டி மாவட்ட இளைஞர், யுவதிகளை அறிவுறுத்தும் நிகழ்ச்சி ஒன்று பேராதனை பெந்தோட்டை பேக் ஹவுஸ் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. தேசிய சமாதான சபை மற்றும் கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு என்பன இணைந்து இதனை ஒழுங்குசெய்திருந்தன. கண்டி மாவட்டத்திலுள்ள பல்வேறு அமைப்புகளையும் சேர்ந்த தமிழ், முஸ்லிம் இளைஞர், யுவதிகள் பெருமளவில் இதில் பங்கு கொண்டனர். அவர்கள் பல்வேறு குழுத் தொழிற்பாடுகளிலும் ஈடுபடுத்தப்பட்டனர். (கண்டி நிருபர் )**

# பசறையில் தீ விபத்து வீடு முற்றாக சேதம்



(நடராஜா மலர்வேந்தன்)

பசறை பிரதேசத்திற்குட்பட்ட கனவரல்ல தோட்ட சீ.வி.ஈ. பிரிவு இல. 06 லயன் தொடர் வீட்டுத்தொகுதியில் வீடொன்று தீக்கிரையாகியுள்ளது.

நேற்று (31) காலை 7.40 மணியளவில் இவ்வனர்த்தம் நிகழ்ந்துள்ளது. இதன்போது வீட்டிலிருந்த பெறுமதிமிக்க வீட்டுத் தளபாடங்கள், உலருணவுப் பொருட்கள் மற்றும் வீட்டின் பகுதிகளும் முழுமையாக எரிந்து தீக்கிரையாகின.

குறித்த வீட்டில் ஆறு பேர் வசித்துவந்த நிலையில் தீ விபத்து ஏற்படும்போது வீட்டில் மகேந்திரன் என்பவருடைய தாயும் தந்தையுமே இருந்துள்ளனர். இரு பெண் பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்றுள்ளதோடு மகேந்திரனும் இவரது மனைவியும் தோட்டத் தொழிலுக்குச் சென்றுள்ளனர்.

தீ விபத்து ஏற்பட்டதையடுத்து அயலவர்களின் உதவியால் வீட்டில் அனர்த்தத்தில் அகப்பட்டிருந்த இருவர் காப்பாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்பதோடு விபத்து குறித்து பசறை மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புளியாவத்தை ஆரம்ப தமிழ் வித்தியாலயத்தில் 17 மாணவர்கள் சித்தி பெற்று சாதனை



(நுவரெலியா நிருபர்)

அண்மையில் வெளிவந்த புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின்படி ஹட்டன் புளியாவத்தை ஆரம்ப தமிழ் வித்தியாலயத்தில் 17 மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். லோகநாதன் கிருசாந்தன் (170), சந்திரகுமார் ஹரிஹரன் (167), கேசவராஜா நிரோசன் (166), புஸ்பராஜ் லதீசா (163), செந்தமிழ்காசன் லக்சிரா (158), சதீஸ்வரன் கென்லிஹோசன் (158), விஜயகுமார் துஸ்னிகா (153), ஆனந்தராஜா பவித்ரா (153), கிருஸ்டோபர் நிலுக்சிகா (151), கிசோகுமார் சவிசான் (150), சுரேஸ்குமார் வினுசன் (148), ரவிச்சந்திரன் கவிசனா (148), ஹன்ரிபோல் இமர்சன் (148), பிரபா சசீனா (148), விஜயகுமார் சாகிசன் (147), குணசேகரன் கௌசிக் (147), யோகேந்திரன் கவிதேஸ் (146) ஆகிய மாணவர்களே சித்தியடைந்துள்ளனர். பாடசாலையின் அதிபர் திருமதி.விஜயநதி மற்றும் வகுப்பாசிரியர்கள் திருமதி கமலாதேவி, திருமதி திலகவதி, திருமதி ஜீவா ஆகியோரின் முயற்சியின் பயனாக இந்த மாணவர்கள் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





**பதுளை மாவட்டம் உள்ளிட்ட ஏனைய பகுதிகளின் ஆன்மீகவாதிகள், கல்வியாளர்கள், சமூகவியலாளர்கள் என்றவகையில், 16 பேருக்கு சமாதான நீதவான் நியமனங்கள் நேற்று (31) பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமாரினால் வைபவரீதியாக வழங்கப்பட்டன. (படங்கள் : எம். செல்வராஜா)**

# புதிய உறுப்பினர்கள் தெரிவு உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது

## இ.தொ.காவின் ராமேஷ்வரன் எம்.பி. தெரிவிப்பு



(க.கிஷாந்தன்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் புதிய உறுப்பினர்கள் புதிதாக பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இது எமக்கு ஓர் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது - என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நிதிச் செயலாளருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபைக் கூட்டம் நேற்றுமுன்தினம் முற்பகல் கொட்டகலையிலுள்ள சி.எல்.எவ். வளாகத்தில் நடைபெற்றது.

இதன் பின் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,


இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அரச பங்காளிக்கட்சியாக இருந்தாலும் - எமது மக்களுக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் ஒருபோதும் மௌனம் காத்தது கிடையாது. எனவே, காங்கிரஸை நம்புங்கள். அந்த அமைப்பு உங்களை ஒருபோதும் கைவிடாது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வளர்ச்சிக்கு பலர் அளப்பரிய பங்களிப்பை வழங்கியுள்ளனர். காங்கிரஸில் இளைஞர்கள் மற்றும் பெண்கள் அதிகளவு அங்கத்தவர்களாக உள்ளனர். இம்முறை தேசிய சபையில் இளைஞர்களும், பெண்களும் முன்னுரிமை வழங்கப்பட்டு பதவிகள் வழங்கப்பட்டன.

காங்கிரஸுக்கு சோதனை வந்த காலகட்டங்களில் எல்லாம் நீங்கள் எமக்கு பக்கபலமாக இருந்துள்ளீர்கள். இனியும் இருப்பீர்கள். நாமும் உங்களை கைவிடமாட்டோம்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது, விலைவாசி உயர்ந்துள்ளது. இவை பற்றி காங்கிரஸ் கதைப்பதில்லை என சிலர் விமர்சிக்கின்றனர். நாம் அரச பங்காளிகளாக இருந்தாலும், மக்களுக்கு பிரச்சினை என்றால் மௌனம் காக்கமாட்டோம் - என்றார்.

## சிவபுரம் தேவாலயத்தினுள் சடலம் மீட்பு



(வவுனியா நிருபர்)

வவுனியா சிவபுரம் பகுதியிலுள்ள தேவாலயத்தினுள் நேற்று (31) அதிகாலை 35 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவரின் சடலத்தினை பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.

குறித்த கிறிஸ்தவ தேவாலயத்தினுள் தூக்கில் தொங்கிய நிலையில் ஒருவரின் சடலம் காணப்படுவதாக பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து, சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் குறித்த சடலம் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்நபரின் சடலத்திற்கு அருகே பயணப்பொதியொன்று காணப்படுவதுடன், குறித்த நபர் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# பிரபாகரனை பயங்கரவாதியாக்கியது யார் என்பதை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் வெளிப்படுத்துவேன்

## தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவர் கவனயீர்ப்புப் போராட்டத்தில்

(யாழ். நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை பயங்கரவாதியாக்கியது யார் என்பதனை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் வெளிப்படுத்துவேன் எனக் கூறி தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவர் யாழ்ப்பாணம் சுப்பிரமணிய பூங்கா முன்றலில் நேற்றுக் காலை முதல் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஏன் பயங்கரவாதி ஆக்கப்பட்டார், என்ன காரணத்திற்காக அவர் குற்றவாளி ஆக்கப்பட்டார், அவர் ஒரு சாதாரண மனிதனாக இருந்திருப்பார். ஆனால், இலங்கையில் இருந்த அரசியல் பின்னணி மற்றும் ஏதோ ஒரு சூழ்ச்சியின் காரணமாகவே அவர் பயங்கரவாதி என பெயர் குறிப்பிடப்படும் அளவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். இனியும் வடக்கிலிருந்து ஒரு பிரபாகரன் உருவாகும் நிலைமையினை நாங்கள் ஏற்படுத்தக்கூடாது. இனி பிறக்கும் குழந்தைக்கு நாங்கள் சயனைட் குப்பியை கொடுக்காது, வடக்கு - தெற்கு மக்கள் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் எதிர்காலத்தில் மீண்டும் ஒரு பிரபாகரன் போன்றவர்களை நாங்கள் உருவாக்காது தடுக்க முடியும் – என்றார்.



# வவுனியா நகர மத்தியில் கவனயீர்ப்புப் போராட்டம்




(வவுனியா நிருபர்)

கோட்டா - மஹிந்தவின் மக்கள் விரோத ஆட்சிக்கு எதிராக, என தெரிவித்து வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று (31) காலை 10 மணியளவில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று இடம்பெற்றது.

"கோட்டா - மஹிந்த அரசே எம்மை கொள்ளாதே, விலை உயர்த்தி சாவடிக்காதே , நாட்டு மக்களை ஏமாற்றி பிழைக்காதே, சர்வதேச நாணய நிதியத்திடம் நாட்டை விற்காதே, மீண்டும் மீண்டும் கடன் வாங்கி எங்களை அடைவு வைக்காதே, தள்ளாதே தள்ளாதே பட்டினிச்சாவில் தள்ளாதே" போன்ற பல கோஷங்களை எழுப்பியவாறும், "விலை உயர்வினை தடுத்து நிறுத்து, கட்டுப்பாட்டு விலையினை கொண்டு வா, உழைக்கும் மக்களை பட்டினிச்சாவுக்குள் தள்ளாதே, தாராளமயம் தனியார் மயம் தந்த பரிசுகளே இன்றைய அவலநிலை, என்ன வளம் இல்லை இந்த நாட்டில் ஏன் கை ஏந்த வேண்டும் அந்நிய நாட்டில், அரசியலமைப்பை மாற்ற வேண்டும், தேசிய பொருளாதாரம் உருவாக வேண்டும், நேற்று அங்கர் 980ரூபா இன்று 1900ரூபாவிற்கும் இல்லை, கோதுமை மா நேற்று 85ரூபா இன்று 190ரூபாவிற்கும் இல்லை, கடனுக்குள் தள்ளியோர் உல்லாச வாழ்வு நாட்டு மக்கள் பட்டினிச்சாவு" போன்ற வசனங்களை தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எரிவாறு சிலிண்டர், மின்சாரம், அடுப்பு, மண்ணெண்ணெய் போன்றவைக்கு தற்போதும் வரிசையில். ஆனால், அவைகள் இல்லை என்பதை சித்தரிக்கும் வகையில் குறித்த பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன், குறித்த போராட்டம் சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்றிருந்தது.

இப்போராட்டத்தில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியினர், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் என 70இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

# தந்தை செல்வாவின் 124ஆவது ஜனன தினம்

## யாழில்...

(யாழ். நிருபர்)



தந்தை செல்வாவின் 124 ஆவது பிறந்தநாள் நினைவு நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் யாழ். மத்திய கல்லூரியிலுள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தந்தை செல்வாவின் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.



செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் தலைமை அறங்காவலர் சா.செ.ச.இளங்கோவன், யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ஷ்ரீன் அப்துல் ஸரூர், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன், தமிழ்த் தேசியக் கட்சியின் எம்.கே.சிவாஜிலிங்கம், உட்பட தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## வவுனியாவில்...



(வவுனியா நிருபர்)

வவுனியா பிரதான மணிக்கூட்டுப் கோபுரத்திற்கு அருகிலுள்ள தந்தை செல்வா நினைவுத்தூபியில் நேற்று (31) காலை 9 மணியளவில் நகரசபை உறுப்பினர் நா.சேனாதிராஜா தலைமையில் தமிழரசுக் கட்சியின் தலைவர் தந்தை செல்வநாயகத்தின் 124ஆவது ஜனன தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது தமிழரசுக் கட்சி வவுனியா மாவட்ட உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு அன்னாரது நினைவுத்தூபிக்கு மலர்மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்தினர்.

அதன் பின்னர் தந்தை செல்வநாயகத்தின் பெருமைகள் மற்றும் அவர் முன்னெடுத்த சேவைகள் தொடர்பில் நகரசபை உறுப்பினர் நா.சேனாதிராஜா உரை நிகழ்த்தியதுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

## மன்னாரில்....



(மன்னார் நகர் நிருபர்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் 124ஆவது பிறந்த தின நிகழ்வு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் மன்னார் நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா சிலையடிக்கு முன் நேற்று (31) காலை நடைபெற்றது.



இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளைச் செயலாளரும் மன்னார் நகர சபையின் உப தவிசாளருமான ஜான்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், இலங்கை தமிழரசுக் கட்சி மன்னார் கிளையின் முக்கிய உறுப்பினர்கள், மன்னார் நகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது தந்தை செல்வாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, அஞ்சலி செலுத்தப்பட்டு, சிறப்புரையும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் போதைப்பொருள் விற்பனை, 5 வீடுகளில் புகுந்து கைவரிசை காட்டியவர் கைது

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் போதைப்பொருள் விற்பனை மற்றும் பட்டப்பகலில் 5 வீடுகளில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஒருவர் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் நேற்று முன்தினம் (30) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியாவில் கடந்த இரு மாதங்களாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்திருந்தன. அந்தவகையில் வவுனியாவின் பண்டாரிக்குளம், உக்குளாங்குளம், வைரவபுளியங்குளம், குறுமன்காடு, தோணிக்கல் ஆகிய பகுதிகளில் பட்டப்பகலில் பூட்டப்பட்டிருந்த 5 வீடுகளுக்குள் சென்ற திருடர்கள் சமையலறை புகைக்கூடு வழியாக உள்நுழைந்து நகைகள், பணம், தொலைபேசி, கெமரா உள்ளிட்ட பல்வேறு பொருட்களை திருடிச் சென்றுள்ளதாக வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த முறைப்பாட்டுக்கமைவாக, வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜே.ஏ.எஸ்.ஜெயக்கொடியின் வழிகாட்டலில் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் கியான் தலைமையில் பொலிஸ் சார்ஜன்டுகளான திசாநாயக்கா (37348), விக்கிரமசூரிய (36099), டிலீபன் (61461), உபாலி (60945) பொலிஸ் கான்ஸ்டபிள்களான சங்கயரொஹான் (31043), தயாளன் (91792), திசாநாயக்கா (18219) ஆகிய பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது குறித்த திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் கற்குழி பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து திருடப்பட்ட தொலைபேசி, கைக்கடிகாரம், கெமரா, உருக்கப்பட்ட நகைகள் என்பன மீட்கப்பட்டுள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளின் பின் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

குறித்த நபர் போதைப்பொருள் விற்பனை செய்தமை மற்றும் 5 திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனப் பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# கிளிநொச்சியில் தங்களுக்குத் தாங்களே கைகளை வெட்டிக்கொள்ளும் மாணவர்கள்

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள பிரபல பாடசாலை ஒன்றில் சுமார் 20 மாணவர்கள் பிளேட்டினால் தங்களது கைகளை தாங்களே வெட்டிக்கொண்டுள்ளதாக சக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன் தரம் ஒன்பதில் கல்வி பயிலும் மாணவர்கள் பலர் பிளேட்டினால் தங்களது கைகளை தாங்களே வெட்டியுள்ளனர். பின்னர் குருதியினை கடதாசி மூலம் துடைத்துவிட்டு கிருமி தொற்றுநீக்கி (ஷனிரேசன்) காயத்தின் மேல் விசிறிக்கொண்டதாக நேரில் பார்த்த சக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனை குறித்த மாணவர்கள் சாதாரணமாக செய்து கொள்வதாகவும், ஒருவருக்கு ஒருவர் பார்த்து வெட்டிக்கொண்டதன் மூலமே வெட்டியவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததாகவும் சக மாணவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகள் ஒருவித உளவியல் பிரச்சினையாக கூட இருக்கலாம். மாணவர்களுடன் உரையாடி அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்க வேண்டும் என மருத்துவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

உளநல மருத்துவர் ம.ஜெயராசா கருத்து தெரிவிக்கையில், கோபத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையில் ஓரிரு மாணவர்கள் செய்வதனை பார்த்து ஏனைய மாணவர்களும் இவ்வாறு செய்து கொண்டுள்ளனர். கட்டிளம் பருவத்தில் மாணவர்கள் இதுபோன்ற ஹீரோசியம் எனும் போர்வையில் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு கைகளில் வெட்டிக்கொள்ளும் மாணவர்கள் அனைவரும் கட்டாயம் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான மாணவர்கள் அல்ல. அத்தோடு கைகளை வெட்டிக்கொள்ளும் மாணவர்கள் தங்களது கல்வி நடவடிக்கைகள் நிறைவுற்று வேலைவாய்ப்புகள் முக்கியமாக பொலிஸ், நீதித்துறை மற்றும் இராணுவம் உள்ளிட்ட பல தொழில் துறைகளுக்கு நேர்முகத் தேர்வுகளுக்குச் செல்லும்போது பெரும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

எனவே, இம் மாணவர்களுக்கு நாங்கள் உளவியல் ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கவுள்ளோம் – என்றார்.

# விளையாட்டு மைதானத்திற்கான உபகரணங்கள் கையளிப்பு



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி நகரசபையின் உதயசூரியன் முன்பள்ளி விளையாட்டு மைதானத்திற்கான உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு மற்றும் முன்பள்ளியின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு ஆகியன கடந்த 24ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றிருந்தன.

சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்களாக பவுலினா சுபோதினி தயாளரசன் மற்றும் தர்சன் ஆகியோரின் கோரிக்கைக்கமைவாக புலம்பெயர் உறவான இரட்ணம் ரவீந்திரன் என்பவர் முன்பள்ளியின் விளையாட்டு முற்றத்திற்கு ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை வழங்கியிருந்த நிலையில் விளையாட்டு முற்றத்தை சாவகச்சேரி நகரசபை தவிசாளர் சிவமங்கை இராமநாதன் திறந்து வைத்திருந்தார்.

திகதி 30.03.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4722
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 14,089,920.00
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 4 6 7 8 6 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,853,659.00

Mega POWER கோடி 23+ மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1070
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,622,860.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 244,908,030.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து T
சுப்பர் இலக்கம் 24
வெற்றி இலக்கங்கள் 28 37 49 50

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 752
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,596,500.00
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 27 41 55 60
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 105,448,046.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1230
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.3,285,860.00
வெற்றி இலச்சினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 1 5 5 5 9 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,763,423.60

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்கக்கோரி முத்து நகர் பாடசாலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை கல்வி வலயத்துக்கு உட்பட்ட தி/முத்து நகர் முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆசிரியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக்கோரி நேற்று (31) பெற்றோர், மாணவர்கள் இணைந்து பாடசாலைக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"மாற்றாதே மாற்றாதே ஆசிரியரை மாற்றாதே, வேண்டும் வேண்டும் ஆசிரியர் வேண்டும், ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்" போன்ற வாசகங்களை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

குறித்த பாடசாலையில் தரம் 09 வரையில் கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இருந்தபோதிலும், அந்த பாடசாலையில் தற்போது ஆறு ஆசிரியர்கள் மாத்திரமே கற்பித்து வருகின்றனர். இந்த பாடசாலை பின்தங்கிய நிலையிலுள்ளது.




இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இருக்கின்ற ஆசிரியர்களை இடமாற்றம் செய்து பதில் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. 2019 இல் இரு ஆசிரியர்கள், 2020 இல் இரு ஆசிரியர்கள், 2021 இல் மூன்று ஆசிரியர்கள் இடமாற்றப்பட்டபோதிலும் பதில் ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையினாலும் அதிபரை இடமாற்றம் செய்து தற்போது பதில் அதிபர் ஆறு ஆசிரியர்களில் ஒருவர் கடமையாற்றுவதனாலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கவனயீர்ப்பில் ஈடுபட்ட பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

தரம் 2,3க்கான நிரந்தர ஆசிரியர்கள் பல மாதங்கள் இல்லாத நிலையிலும் கல்வி நடவடிக்கைகள் பின்னோக்கி செல்வதாகவும் இது தொடர்பில் உரிய கல்வி அதிகாரிகளுக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மூலமாக தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் பெற்றோர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். குறித்த பாடசாலை தரம் 9 வரை தற்போது உள்ளது. இதனை தரம் 11 வரையாவது தரமுயர்த்தி தருமாறும் கோரிக்கை விடுக்கின்றனர். பின்தங்கிய இப்பாடசாலையில் தரம் ஒன்பது வரை கற்பித்து உயர்கல்விக்காக தூர இடங்களுக்கு செல்ல வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாகவும் மாணவர்களுக்கு இதன் ஊடாக பாதுகாப்பின்மை உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

## போடியார் புலம்பல்!



**இஞ்ச மக்களெல்லாம் பஞ்சம் பசி பட்டினி போதாக்குறைக்கு 13,15, மணித்தியாலம் கரண்ட வெட்டி இருட்டுக்குள சனங்கள் புள்ள குட்டிகளொட பரிதவிக்கிதுகள்... அதுக்குள மட்டக்களப்புல இருக்கிற கறுப்பு இராஜாங்க அமைச்சர் விசாழேந்திரன் சுபீட்சத்துக்கான வேலத்திட்டமாம் எண்டு படங்காட்டிறாரு எலுவா.**

**அடே தம்பி எங்கடா இஞ்ச சுபீட்சம் இருக்கு எல்லாமே உண்ட சட்டயப்போல கறுப்பாத்தாண்டா இருண்டு கிடக்கு உட்டுப்போட்டு பேசாம படுடா ! நீ அண்டைக்குன கறுப்பு சட்ட போட்ட பலன் இண்டைக்குத்தான் தெரிஞ்சது நாடே இருட்டாக போகுது எண்ட சங்கதி!**

# சேவைநலன் பாராட்டு விழாவும் மாணவர்கள் கௌரவிப்பும்






(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய மாளிகைக்காடு கமு/கமு/ சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தில் கடந்த வருடம் வெளியான புள்ளிகளின் அடிப்படையில் சித்தி எய்திய புலமையாளர்களையும் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியைகளையும் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். அஸ்மி தலைமையில் நேற்று (31) பாடசாலை கூட்டமண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை கல்வி வலய வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், கௌரவ அதிதியாக கல்முனை கல்வி வலயத்தின் பிரதம கணக்காளர் வை. ஹபீபுள்ளாஹ் மற்றும் விசேட அதிதிகளாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜே. டேவிட் உட்பட முன்னாள் கல்முனை சாஹிறாக் கல்லூரி அதிபர் சட்டத்தரணி எம்.சி. ஆதம்பாவா மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, புலமைப்பரிசில் சித்தி எய்திய எம்.ஏ.சீனத் லிமா (158) மற்றும் எம்.எச்.எம். றுசைக் (153) ஆகிய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியைகளான திருமதி எல்.ஏ. அழீம் மற்றும் திருமதி மணிமாறன் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.






ஏறாவூர் தமிழ்ச்சாரல் கலை இலக்கிய வட்டத்தின் தமிழ்ச்சாரல் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடும், பெண் ஆளுமைகளைக் கௌரவிக்கும் நிகழ்வும் ஏறாவூர் கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது. (படங்கள் - எம்.எஸ்.எம்.ஸாகிர்)

# அஸ்ஹர் வித்தியாலயத்தில் ஐந்து மாணவிகள் சித்தி



(மீராவோடை நிருபர்)

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேற்றின்படி, ஓட்டமாவடி கோட்டக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை அஸ்ஹர் வித்தியாலயத்தில் ஐந்து மாணவிகள் சித்தியடைந்துள்ளதாக பாடசாலை அதிபர் எல்.ரீ.எம்.சாதிக்கீன் தெரிவித்தார்.

இதில், எம்.ஏ.சீ.ஆயிஷா நதா 181, எம்.ஆர்.எப்.றீஸ்மா 179, ஏ.என்.எப்.சனப் மிஸானி 172, எப்.எப்.ஹனா 165, எம்.ஆர்.ருக்கையா 158 ஆகிய புள்ளிகளை பெற்றுள்ளனர்.

படத்தில் சித்தியடைந்த மாணவிகளுடன் பாடசாலை அதிபர் எல்.ரீ.எம்.சாதிக்கீன் கற்பித்த ஆசிரியை எம்.எம்.சனூபா மற்றும் சிரேஷ்ட ஆசிரியர் ஏ.யூ.எம்.பாரூக் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# சாய்ந்தமருது றியாழுல் ஜன்னா வித்தியாலயத்தின் முப்பெரும் விழா

சாய்ந்தமருது றியாழுல் ஜன்னா வித்தியாலயத்தின் முப்பெரும் விழா பாடசாலை அதிபர் ஏ. முஹம்மட் அன்சாரின் தலைமையில் பாடசாலையின் ஆராதனை மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்வி அதிகாரி எஸ்.புவனேந்திரன் கலந்துகொண்டார்.

பாடசாலையின் வரலாற்றில் 1959ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலையானது கடந்த சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட பாடசாலையாகும்.






கடந்த காலங்களில் கடமையாற்றிய அதிபர்களும், ஆசிரியர்களும் முயற்சி செய்த போதும் பாரிய முன்னேற்றம் காணாதபோதும் இம்முறை 2021ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப் பரீட்சையில் முதன் முறையாக வரலாற்றுச் சாதனை படைத்த 04 மாணவர்களான ஏ.ஏ.பாத்திமா (161), ஜே.அதினா (155), ஏ.எம். பாத்திமா அஜ்ஹா (155) ஆகியோர் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்றதோடு, கண்பார்வையற்ற விரல்களால் தொட்டு உணர்ந்து வாசித்து பிரைல் மூலம் விடை எழுதும் விசேட தேவையுடைய மாணவன் எம். தன்வீர் ஆசிப் (136) ஆகிய மாணவர்கள் சித்தி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்தமை விசேட அம்சமாகும்.

இதன்போது புலமைப் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் நினைவுச் சின்னங்களும் பரிசில்களும் வழங்கியதோடு அதிதிகளுக்கு பொன்னாடையும் போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

இப்பாடசாலையில் புலமைப் பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்களுக்கு கௌரவிப்பும், மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வும் மற்றும் பாலர் பாடசாலையின் வகுப்பறை திறப்பு விழா ஆகியன முப்பெரும் விழாவாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பாரிய குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 'ஜெயச்சந்திரன் ரீம்' குழுவின் நால்வர் கைது

## ஆயுதங்களுடன் போதைப்பொருளும் மீட்பு



(கனகராசா சரவணன், ரீ.எல்.ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு மொறக்கொட்டாஞ்சேனை, செங்கலடி, ஜயங்கேணி பிரதேசங்களில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள், வீடுடைப்பு மற்றும் வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய ஜயங்கேணி 'ஜெயச்சந்திரன் ரீம்' என்ற பெயரில் இயங்கிவந்த குழுவைச் சேர்ந்த 4 பேர் நேற்று (31) கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார்.

இவர்களிடமிருந்து கைக்குண்டு, வாள், கோடரி மற்றும் ஹெரோயின் போதைப் பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த பகுதிகளில் இந்த குழுவால் பெரும் அச்சுறுத்தல் நிலவி வந்துள்ளதையடுத்து, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்கவின் வழிகாட்டலில் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தலைமையில் பொலிஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டு தொடர்ந்து இரவு வேளைகளில் குறித்த பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.

இந்த நிலையில் இந்த குழுவினர் பதுங்கியிருந்த இடத்தை சம்பவதினமான நேற்று பொலிஸார் முற்றுகையிட்டு 4 பேரை கைது செய்துள்ளதுடன், கைக்குண்டு, வாள், கோடரி மற்றும் 8 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா மற்றும் ஏறாவூர் ஜயங்கேணி பிரதேசங்களைச்





சேர்ந்தவர்கள் எனவும் இதில் ஜயங்கேணியைச் சேர்ந்த 24 வயதுடைய மற்றும் 26 வயதுடைய இருவருக்கு கொள்ளை மற்றும் வீடுடைப்பு, வாள்வெட்டு சம்பவங்கள் தொடர்பாக 19 வழக்குகள் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னர் புளொட் அமைப்பில் செயற்பட்டுவந்த வவுனியாவைச் சேர்ந்த இவர், பல்வேறு கொள்ளை மற்றும் வீடுடைப்பு, வாள்வெட்டு சம்பவங்களில் தொடர்புடையவர் எனவும் அவரிடமிருந்து கைக்குண்டு ஒன்றை மீட்டுள்ளதாகவும் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார்.

இதேவேளை, இந்த பகுதியில் இவ்வாறு கொள்ளை மற்றும் வீடுடைப்பு, வாள்வெட்டு சம்பவங்களில் இன்னும் ஒரு குழு இயங்கிவருவதாகவும் இவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் தெரிவித்த அவர், இவ்வாறு பொதுமக்களை அச்சுறுத்தி வருபவர்கள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டுவருபவர்கள் தொடர்பான தகவல்கள் தெரிந்தால் பொதுமக்கள் உடனடியாக மாவட்ட குற்றவிசாரணைப் பிரிவுக்கு தெரிவிக்குமாறு அவர் தெரிவித்தார்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# சிங்கள மொழி பாடநெறியினை பூர்த்தி செய்த அரச உத்தியோகத்தர்களின் பிரியாவிடை நிகழ்வு





(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் சிங்கள மொழி பாடநெறியினை பூர்த்தி செய்த அரச உத்தியோகத்தர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.ஏ.சி.முகம்மட் றகீப் ஒருங்கிணைப்பில் அட்டாளைச்சேனை லொயிட்ஸ் ஹோட்டலில் நேற்று (31) நடைபெற்றது.

இந்நிகழ்வில், அதிதிகளாக அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமட் ஷாபிர், உதவி பிரதேச செயலாளர் எப்.நஹீஜா முஷாபிர், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.ஜௌபர், நிர்வாக உத்தியோகத்தர் ஆர். எம். நழில், தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் போதனாசிரியர் எஸ். பாக்கியரட்ணம் மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகம் மற்றும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் பணியாற்றும் 60 அரச உத்தியோகத்தர்கள் இப்பாடநெறியினை பூர்த்தி செய்துள்ளதுடன் அவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றதுடன், போதனாசிரியர் எஸ். பாக்கியரட்ணத்துக்கு பொன்னாடை மற்றும் நினைவுச்சின்னம், பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார். நாட்டின் நிர்வாகத்துறையினை சிறப்பாக முன்னெடுக்கும் வகையிலும், சகல இன மக்களிடத்திலும் மொழி வழியிலான சமாதானம், ஐக்கியம், இன ஒற்றுமையை கட்டியெழுப்பும் வகையிலும், அரச உத்தியோகத்தர்களை இரு மொழிப் பயன்பாட்டிற்கு தேர்ச்சிபெறச் செய்யும் நோக்கில், தமிழ் பேசும் அரச ஊழியர்களுக்கு சிங்கள பாடநெறி அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இவ்வாறான பாடநெறிகள் அம்பாறை மாவட்டத்தில் பல அலுவலகங்களிலும் திணைக்களங்களிலும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை மாநகர சபைக்கு புதிய ஆணையாளர் நியமனம்



கல்முனை மாநகர சபையின் ஆணையாளராக பொறியியலாளர் என். சிவலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏப்ரல் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் இந்த நியமனம், கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கமைய அவர் இன்று (01) கல்முனை மாநகர சபையில் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்கவுள்ளார். இவர், இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட உறுப்பினராவார்.

கல்முனை மாநகர ஆணையாளராக தற்போது செயற்படும் ஏ.சீ. அன்சார், கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் அலுவலகத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு இந்தியா உதவி செய்வது வரவேற்கத்தக்கது

## புரையோடிப்போயுள்ள தமிழர் இனப்பிரச்சினைக்கான தீர்வை விரைவுபடுத்த வேண்டுமென கலையரசன் எம்.பி. வலியுறுத்து

(கனகராசா சரவணன்)

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் இந்தியா கூடுதலான உதவிகளை செய்துவருவது வரவேற்கத்தக்கது. அதேவேளை, இந்த நாட்டில் நீண்டகாலமாக புரையோடிப்போய் இருக்கின்ற தமிழர்களுடைய இனப்பிரச்சினையை விரைவுபடுத்தி தீர்ப்பதற்கும் இந்தியா முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் - என நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் (30) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்திய வெளிவிவகார அமைச்சர் எமது நாட்டின் தலைவர்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் சந்தித்துள்ளார். இருந்தபோதும் இன்று இந்த பொருளாதாத்தின் பின்னடைவால் யுத்தச் சூழலால் பாதிக்கப்பட்ட எமது தமிழ் உறவுகளே கூடுதலாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டிலே எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது மாத்திரமல்ல, இன்று அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் வழங்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது. நாட்டில் 12 மணித்தியால மின்வெட்டு காரணமாக எரிபொருட்களை மின்சார சபைக்கு வழங்க வேண்டும் என்பதற்காக நிறுத்தியிருப்பதாக அறிகின்றேன்.

உண்மையில் தற்போது இருக்கும் நிலைமையை விட மோசமான நிலைமையை இது ஆக்கிவிடும். ஏனென்றால், எந்த எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் டீசல் வழங்கவில்லை. அதுமாத்திரமல்ல, நெல்லின் விலை உயர்வடைந்துள்ளதால் அரிசியின் விலை அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. இதனால் அரிசியை வாங்கி சாப்பிடும் மக்களுக்கு ஒரு பாரிய சுமையாக இந்தச் சூழல் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. எனவே, இதற்கு அரசாங்கம் உடனடித் தீர்வு காணவேண்டும்.

அதுமாத்திரமல்ல, சிறுபோக விவசாயம் ஆரம்பிக்கப்பட்டுவரும் இந்தச் சூழலில் டீசல் தட்டுப்பாட்டால் இந்த விவசாயத்துறை பாதிக்கப்படும். அதற்கு சரியான தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும்

அதேவேளை, இப்போது நாட்டில் இந்த அரசாங்கம் கையாள்கின்ற மிகவும் மனவேதனையான விடயம், கொரோனா தொற்று, பொருளாதார வீழ்ச்சி, டொலர் பிரச்சினை இந்த



அடிப்படை இருக்கின்றபோது விவசாயத்துக்கான உரப் பிரச்சினையை பாதிக்கப்படக்கூடிய வகையில் அரசாங்கம் கையாண்ட கொள்கைப் பிரகடனம் இன்று இந்த நாட்டில் வறுமையான நிலைக்குச் சென்றுள்ளது என்பது யாரும் மறுக்கமுடியாதது.

எனவே, அரசாங்கத்தால் இரசாயன உரத்தை இல்லாமல் செய்ததனால் இன்று ஏக்கருக்கு 12 மூடைகள் என்ற அடிப்படையில் வேளாண்மை விளைந்தது இதற்குக் காரணம். எனவே, பொருளாதார ரீதியாக பின்னடைவை சந்தித்திருக்கும் இந்த அரசாங்கம், இந்தச் சூழலில் விவசாயிகளை வளப்படுத்தக்கூடிய வகையில் அவர்களின் கொள்கைப் பிரகடத்தை மாற்றியமைக்கவேண்டும். உடனடியாக இரசாயன உரத்தை விவசாயிகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை கையாளவேண்டும். அல்லாவிடின் பாதிப்பு ஏற்படும் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

இப்பொழுது அரசாங்கத்துடன் செயற்படுகின்ற சில அரசியல்வாதிகள் யூரியா என்கின்ற உரமான 50 கிலோ கொண்ட ஒரு பொதியை 38 ஆயிரம் ரூபாவுக்கு இரகசியமாக கொள்வனவு செய்யக்கூடிய நிலைமை இருப்பதை அறிகின்றேன்

அதேவேளை, இந்த மின்சாரத் தடையின் ஊடாக மாணவர்களின் கல்வி மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது அதேபோன்று ஏனைய திணைக்கள ரீதியாக கையாளப்படுகின்ற நடவடிக்கைகள் கூட உடனடியாக நிறைவேற்றிக்கொள்ள முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று மண்ணெண்ணெய்க்கு வரிசையில் நிற்பது மனவேதனையான விடயம். அதிகமான கடல் தொழிலாளர்கள் மண்ணெண்ணெயை பயன்படுத்தி மீன்பிடியை மேற்கொள்கின்றனர். இன்று மீன்பிடிக்க செல்லமுடியாது. இதனால் கடல் வளம் பாதிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று மண்ணெண்ணெயை பயன்படுத்தி மரக்கறி பயிர்ச்செய்கை செய்கின்றவர்கள் கூட அதனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், மீன்சாரத் தடை காரணமாக மண்ணெண்ணெயை வாங்கி வீடுகளில் ஒளியை ஏற்றமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதையெல்லாம் அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும். நேற்றுமுன்தினம் எரிபொருளுக்கு பொறுப்பாக இருக்கின்ற அமைச்சர், நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு இல்லை என்று தெரிவித்துள்ளார். எனவே, இதனை பார்க்கின்றபோது சந்தேகம் ஏற்படுகின்றது. அமைச்சர்கள் இவ்வாறு கருத்துகளை முன்வைப்பதால் இந்த அரசாங்கத்தை மக்கள் நம்பக்கூடாத சூழல் ஏற்பட்டுள்ளது - என்றார்.

# மட்டக்களப்பு வவுணதீவில் குடும்பஸ்தர் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்பு!

(கல்லடி நிருபர்)

வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்காடு பிரதேசத்தில் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கிட்டுத் தொங்கிய நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை (29) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான வேலாயுதம் புஸ்பராசா (வயது - 54) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.


இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

குறித்த குடும்பஸ்தர் தனது குடும்பத்தினருடன் பிறந்ததின நிகழ்வொன்றிற்குச் சென்று வீடு திரும்பிய நிலையில், சம்பவ தினத்தன்று அவருக்குச் சொந்தமான மற்றொரு வீட்டுக்குச் சென்றுள்ளார். அவர் மீண்டும் வீடு திரும்பாத நிலையில் அவரின் மனைவி சம்பவம் நடைபெற்ற வீட்டினைச் சென்று பார்வையிட்டபோது அவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி.றிஸ்வானின் உத்தரவுக்கமைய சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைச் சென்று பார்வையிட்டதுடன், உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சுரவணையடியூற்றில் புதிய பாடசாலை திறந்துவைப்பு



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு, போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சுரவணையடியூற்று கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலை இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனினால் கடந்த 29ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டுள்ளது.

பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் கலந்துகொண்டதுடன், பாடசாலையின் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் பிரதான அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அதிதிகள் உரை இடம்பெற்றதனைத் தொடர்ந்து பிரதம அதிதி உள்ளிட்ட அதிதிகளினால் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் இரா.ராகுலநாயகி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி ந.புள்ளைநாயகம், வலயக்கல்விப் பணிப்பாளர், முற்போக்கு தமிழர் கழகத்தின் உறுப்பினர்கள், ஆசிரியர்கள் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



ஆரம்பக் காலப்பகுதியிலிருந்தே இந்தப் பிரதேசத்திலுள்ள மாணவர்கள் ஏனைய கிராமங்களில் அமைந்துள்ள பாடசாலைக்குச் சென்றே கல்வி கற்று வந்தனர். இது தொடர்பில் ஊடகங்களிலும் பலமுறை பேசப்பட்டுவந்த இந்நிலையில், அக்கிராமத்தவர்களின் அயராத முயற்சியினால் அக்கிராமத்தில் தற்போது ஆரம்ப பாடசாலை ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனையிட்டு அங்குள்ள மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

# பஸ் - மோட்டார்சைக்கிள் மோதி விபத்து

## ஒருவர் உயிரிழப்பு

(கியாஸ் ஷாபி, அப்துல்சலாம் யாசீம்)

கிண்ணியா - மட்டக்களப்பு பிரதான வீதி, உப்பாறு பிரதேசத்தில் நேற்று முன்தினம் (30) இரவு தனியார் பஸ் ஒன்றும் மோட்டார்சைக்கிள் ஒன்றும் மோதியதால் ஏற்பட்ட விபத்தொன்றில் 42 வயதான பெண்ணொருவர் சம்ப இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கிண்ணியா தள வைத்தியசாலையில் சிற்றூழியராக கடமையாற்றும் மூதூர் இறால் குழியைச் சேர்ந்த ஆர். ஜோதிமணி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண், கிண்ணியாவிலிருந்து மோட்டார்சைக்கிளில் இறால்குழியிலுள்ள தனது வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தபோது, மட்டக்களப்பிலிருந்து திருகோணமலை நோக்கிவந்த தனியார் பஸ் ஒன்று, மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஓய்வுபெற்றுச் சென்ற ஆசிரியைக்கான சேவைநலன் பாராட்டு வைபவம்




(கல்லடி நிருபர்)

கல்முனை கல்வி வலயத்திலுள்ள நற்பிட்டிமுனை சிவசக்தி வித்தியாலயத்தில் 10 வருடகாலம் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற அதிபர் சஞ்சீவி சபாரெத்தினத்துக்கான சேவைநலன் பாராட்டு வைபவம் அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் திருமதி யோகேஸ்வரி இராமநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை வலய நிர்வாகத்துக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எல்.ஏ.றஹீமும், கௌரவ அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வரணியா சாந்தகுமார் மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சரவணமுத்து ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஓய்வுபெற்றுச் செல்லும் அதிபர் சஞ்சீவி சபாரெத்தினத்துக்குப் பொன்னாடை போர்த்தி, மலர்மாலை



அணிவிக்கப்பட்டு, பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகள், பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களால் இவரின் சேவைகள் புகழ்ந்து பேசப்பட்டன.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# நூல் வெளியீடும் பிரியாவிடை நிகழ்வும்





(மீராவோடை நிருபர்)

வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய அதிபர் எம்.ரீ.எம்.பரீட் 37 வருட கல்விப் பணியிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் நிலையில் அவரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் நேற்று முன்தினம் (30) இடம்பெற்றது.

பாடசாலையின் பிரதி அதிபர் எம்.யூ.எம். முகைதீன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பரீட் அதிபரின் சேவைகளை பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன், அவரது வாழ்வியல் தொடர்பாக தொகுக்கப்பட்ட 'எம்.ரீ.எம்.பரீட் எனும் ஆளுமை' என்ற தலைப்பிலான சிறப்பு மலரொன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அத்துடன், அவரது சேவையை பாராட்டி பொன்னாடை போர்த்தி, நினைவுப் சின்னங்கள் மற்றும் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், அதிதிகளாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலயப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.எஸ். உமர் மௌலானா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜே. தாஜுன் நிஸா, உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.ஜாபீர் கரீம் மற்றும் பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# காரைதீவில் சிறப்பாக சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு



(நூருள் ஹுதா உமர்)

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் 2021ஆம் ஆண்டில் சிறப்பாக சேவையாற்றிய உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் நிகழ்வும், 2022ஆம் ஆண்டுக்கான பயிற்சி கருத்தரங்கும் காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜனினால் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச ரீதியில் இலக்கினை அடைந்துகொண்ட உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வைத் தொடர்ந்து அம்பாறை மாவட்ட இணைப்பதிகாரியினால் கருத்தரங்கும் நிகழ்த்தப்பட்டது.

உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.பார்த்திபன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலக கிராம நிர்வாக உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர், சமூகசேவை உத்தியோகத்தர்கள், அம்பாறை மாவட்ட இணைப்பதிகாரி, விடய பொறுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி



அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பசுமையானதொரு தேசம் தேசிய வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கைத் திட்டம் திருகோணமலையில்

(கந்தளாய் நிருபர்)



பசுமையானதொரு தேசம் தேசிய வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கைத்திட்டத்தின் திருகோணமலை மாவட்ட பிரதான வைபவம் இன்று கந்தளாய் ரஜஎல பிரதேசத்தில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான கபில நுவன் அத்துகோரல தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

தன்னிறைவான குடும்ப அலகினை ஏற்படுத்தல், சூழல் நேயமிக்க விவசாயத்தை மேம்படுத்தல் என்பன இத்தேசிய வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும்.

இதன்கீழ் 2.2 மில்லியன் அலகு வீட்டுத்தோட்டங்கள் தேசிய ரீதியாக உள்வாங்கப்பட்டுள்ளதுடன், திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 41,919 குடும்பங்களும் இத்திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட குடும்ப அலகொன்றுக்கு ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு குறித்த வீட்டுத் தோட்டத்தோடு இயைபுடைய வேலைகளை மேற்கொள்வதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

எமக்கு அவசியமான உணவுற்பத்தியை மேற்கொள்ளல், அநாவசிமற்ற இறக்குமதிகளை மேற்கொள்ளாதிருத்தல், சுகாதார மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு இவ்வேலைத்திட்டம் ஏதுவாக அமைகின்றது. தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வீட்டுத்தோட்டப் பயிர்கள் இதன்போது வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், கந்தளாய் பிரதேச செயலாளர் என்.எம்.உபேக்சா குமாரி, மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கே.குகதாசன், மாவட்ட உர உதவிப் பணிப்பாளர் எச்.ஜி.எஸ்.பிரேமரத்ன, மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் சிவகங்கா சுதீஸ்னா, சமுர்த்தி பயனாளி குடும்ப அங்கத்தவர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.



மாவடிப்பள்ளி அல்-அஷ்ரப் மகா வித்தியாலயத்தில் 1988ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள அதிபர் எம்.ஐ.எம்.சுபைதீனை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. அதிபர் எச்.எம்.எம்.அணீஸ் தலைமையிலான குழுவினர் இவரைப் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டுள்ளது. (படம் - மாவடிப்பள்ளி நிருபர்)

# நாட்டைப் பற்றி சிந்தித்து உழைக்க வேண்டிய தருணமேயன்றி அரசியல் செய்யும் நேரம் இதுவல்ல!

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு





இது அரசியல் செய்யும் நேரம் அல்ல. அனைவரும் நாட்டைப் பற்றி சிந்தித்து உழைக்க வேண்டிய தருணம் - என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டில் 5 ஆயிரம் குளக்கட்டுகளை புனரமைக்கும் இரண்டாம் கட்டப் பணிகளில் கலந்துகொண்டு நேற்றுமுன்தினம் (30) அலரிமாளிகையில் வைத்து உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

குருநாகல், நிக்கவெரட்டிய தேர்தல் தொகுதியில் கொபெய்கனே மீகஸ்வெள பிரதேசத்திலுள்ள குளத்தின் புனரமைப்புப் பணிகள் பிரதமரினால் இணையவழி ஊடாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் சமல் ராஜபக்ஷ மற்றும் இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

பொல்பித்திகம கந்தகொல்ல குளம், பெமினிகல்ல மசுரன்கோட்டே குளம் மற்றும் கிரிபாவ நிக குளம் ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதுடன், அக்குளங்கள் உள்ளிட்ட 5,000 குளக்கட்டுகளை புனரமைக்கும் வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின்கீழ் நாடு முழுவதிலுமுள்ள 100 குளங்களின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இந்நிகழ்வில் பிரதமர் மஹிந்த மேலும் உரையாற்றுகையில்,

பூமியில் வாழும் ஒவ்வொரு உயிரினமும் நீரை நம்பித்தான் வாழ்கின்றன. தண்ணீர் நம் வாழ்வின் அடிப்படை. நாம் பின்னோக்கிச் செல்லும்போது, உலகிலுள்ள ஒவ்வொரு நாகரீகமும் நீரைக்கொண்டே உருவாகிறது. நம் நாட்டுக்கும் அப்படித்தான். பழங்காலத்திலிருந்தே, இந்த நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான ஒவ்வொரு அடியிலும் விவசாயமும் நீர்ப்பாசனமும் பின்னிப்பிணைந்துள்ளன.

அந்தக் காலத்தில் கிராமம், விகாரை, குளம், தாதுகோபம் என்ற கருத்துதான் நமது கலாசாரத்தின் அடிப்படையாக இருந்தது. மேம்பட்ட நீர்ப்பாசனத்தின் மூலம் நாட்டில் விவசாய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதே இவை அனைத்தின் இறுதி நோக்கமாக இருந்தது.

குளங்கள் மட்டுமன்றி அவற்றுடன் இணைக்கப்பட்ட கால்வாய்களும் நமது பண்டைய முன்னோர்களால் உருவாக்கப்பட்டவை. இராட்சத கால்வாய்போல் உலகையே வியக்கவைத்த படைப்புகள் இன்றும் பேசப்படுகின்றன. இத்தகைய மேம்பட்ட நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்தைப் பரம்பரையாகப் பெற்றதால்தான் நம் நாட்டில் விவசாயம் காப்பாற்றப்பட்டது.

இன்று மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதை நாம் அறிவோம். இவை நமக்குத் தெரியாதா அல்லது அறிந்தும் அறியாததுபோன்று உள்ளார்களா என்று சிலர் கேட்கிறார்கள். அதனால்தான் அனைத்துக் கட்சி மாநாட்டைக் கூட்டி நாட்டைப் பற்றி சிந்திக்கவும், அனைவரின் கருத்துகளை கேட்டறிந்து, இந்த நிலையிலிருந்து மீண்டெழுவதற்கான தளமொன்றை நிர்மாணித்தோம்.

கொவிட் தொற்று நம்மால் உருவாக்கப்பட்டது அல்ல. நாங்களே அதனை செய்தோம் என்று மக்களைத் தூண்டிவிட சிலர் முயற்சிப்பதைப் பார்த்தேன். எதிர்க்கட்சியில் இருந்தாலும் நல்ல யதார்த்தமான யோசனைகளை முன்வைக்கத் தயாராகவுள்ளோம். இது அரசியல் செய்யும் நேரம் அல்ல. ஒவ்வொருவரும் நாட்டைப் பற்றி சிந்தித்து உழைக்க வேண்டிய தருணம் இது. எனவே, அனைத்துக் கட்சி மாநாட்டில் கலந்து கொள்ளாதவர்களை அடுத்த முறை கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறோம்.புத்தாண்டுக் காலம் நெருங்குகிறது.

உண்மையான பிரச்சினையை பார்த்துக்கொண்டே நாளை எரிபொருள் இருக்காது, உணவு தட்டுப்பாடு ஏற்படும் என்று பொய்யான மாயைகளை உருவாக்குகிறார்கள். சில பிரச்சினைகள் சிலரின் நலனுக்காக மக்களுக்குத் தெரியாமல் உருவாக்கப்பட்டவை. அதனால்தான் கூறினேன், நெருக்கடி இருப்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

ஒரு அரசாங்கம் என்றவகையில், உங்களின் சிரமங்களை போக்கவும், உங்கள் அன்றாட வாழ்க்கையை கட்டியெழுப்பவும் தேவையான ஆதரவை வழங்குவோம் என்று பிரதமர் கூறினார்.

# இக்கட்டான சூழ்நிலையில் சர்வதேச ஆதரவு அவசியம்

## எதிர்க்கட்சித் தலைவர் தூதுவர்களிடம் தெரிவிப்பு











தற்போது நமது நாடு ஒரு இக்கட்டான கட்டத்திற்கு தள்ளப் பட்டுள்ளது. இதிலிருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்ப சர்வதேசத்தின் ஆதரவு தேவை - என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்நெருக்கடி காரணமாக ஒட்டுமொத்த சமூகமும் பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்நிலையிலிருந்து நாட்டை உடனடியாக மீட்டெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இனவாதம், மதவாதம் மற்றும் பிரிவினைவாதம் மூலம் நாட்டை கட்டியெழுப்ப முடியாது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஐக்கிய மக்கள் சக்தி அனைத்து மனித உரிமைகளுக்காகவும் முன் நிற்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் பல நாடுகளின் தூதுவர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்விடயங்களைக் குறிப்பிட்டார்.

இதன்போது ஓமான், குவைட், இந்தேனேசியா, பாகிஸ்தான், துருக்கி, பலஸ்தீனம், மாலைதீவுகள் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இராஜதந்திர ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன.

# பிரான்ஸ் - இலங்கை நட்புறவுச் சங்க பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்கு வருகை





பிரான்ஸ் - இலங்கை நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் தலைவரும் பிரான்ஸ் நாடாளுமன்ற செனட் உறுப்பினருமான ஜோஎல் கெரியோ உள்ளிட்ட பிரான்ஸ் - இலங்கை நாடாளுமன்ற நட்புறவுச் சங்கப் பிரதிநிதிகள் சிலர் நாடாளுமன்றத்துக்கு அண்மையில் விஜயம் செய்தனர். நட்புறவுச் சங்கத்தின் பிரதித் தலைவி செனட் உறுப்பினர் அனிக் ஜக்மன்ட், சங்கத்தின் உறுப்பினர் அலன் ஹுபர் மற்றும் சங்கத்தின் நிறைவேற்றுச் செயலாளர் திருமதி ஏன் லோரா உள்ளிட்டோர் இதன்போது கலந்துகொண்டனர்.

பிரதிநிதிகள், சபாநாயகரின் கலரியிலிருந்து நாடாளுமன்ற அமர்வை பார்வையிட்டதுடன், இதன்போது தலைமை ஆசனத்திலிருந்த குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன் பிரான்ஸ் பிரதிநிதிகளை வரவேற்று சபையில் விசேட அறிவிப்பை மேற்கொண்டார்.

அதனையடுத்து, இரு நாட்டு நாடாளுமன்ற நட்புறவுச் சங்கங்களுக்கிடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது. இங்கு பிரதிநிதிகளை வரவேற்று உரையாற்றிய நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன், ஏழு தசாப்தங்களாக இலங்கை மற்றும் பிரான்ஸ் இடையில் காணப்படும் வலுவான தொடர்புகளை இருநாட்டு நாடாளுமன்ற நட்புறவுச் சங்கங்கள் ஊடாக மேலும் மேம்படுத்த எதிர்பார்ப்பதாக தெரிவித்தார். அபிவிருத்திக்கான பிரான்ஸ் முகவரகம் மூலம் இலங்கைக்கு அபிவிருத்தி உதவிகளை வழங்குவது தொடர்பிலும் அவர் நன்றிகளை தெரிவித்தார்.

பிரான்ஸ் - இலங்கை நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் தலைவரும் பிரான்ஸ் நாடாளுமன்ற செனட் உறுப்பினருமான ஜோஎல் கெரியோ குறிப்பிடுகையில், பிரான்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையில் பல்வேறு துறைகளில் காணப்படும் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த எதிர்பார்ப்பதாகவும், இலங்கையின் அபிவிருத்திக்கு தொடர்ந்தும் பங்களிப்பு செய்வதாகவும் தெரிவித்தார். இலங்கை சபாநாயகர் உள்ளிட்ட தூதுக்குழுவினருக்கு பிரான்ஸ் வருமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லவரத்து, இலங்கை - பிரான்ஸ் நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் இசுறு தொடங்கொட, இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜே.சி. அலவத்துவல, யதாமினி குணவர்தன, கீதா குமாரசிங்க, டயனா கமகே, அரவிந்த குமார், ஹெக்டர் அப்புஹாமி, கோகிலா குணவர்தன, மேஜர் சுதர்ஷன தெனிபிட்டிய, வசந்த யாப்பா பண்டார, பிரேம்நாத் சி. தொலவத்த, மதுர விதானகே மற்றும் நாடாளுமன்ற பணியாட்கள் தொகுதியின் தலைவரும் பிரதி செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹனத்தீர ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# ரமழானை முன்னிட்டு சீனத் தூதரகத்தால் உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு





(அஷ்ரப் ஏ சமத், நூருல் ஹுதா உமர்)

சீன - இலங்கை இராஜதந்திர உறவு 65 வருடங்கள் பூர்த்தியை முன்னிட்டு முஸ்லிம் உரிமைகள் முன்னணியின் வேண்டுகோளின் பேரில் கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தினால் ரமழான் மாதத்தை முன்னிட்டு மாளிகாவத்தை உள்ளிட்ட சில பிரதேசங்களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற 650 முஸ்லிம் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை நேற்று முன்தினம் (30) பகிர்ந்தளித்தக்கப்பட்டன.

இந்நிகழ்வு மாளிகவத்தை பிரதீபா மண்டபத்தில் முஸ்லிம் உரிமைகள் முன்னணியின் செயலாளர் ரூமி ஆமித் தலைமையில் நடைபெற்றது. கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஏ. கலிலுல் ரஹ்மான் மற்றும் முஸம்மில் ஆகியோர் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் 650 குடும்பங்களை தெரிவுசெய்திருந்தனர்.

இங்கு உரையாற்றிய சீனத் தூதுவர் ஸி ஸென்ஹொங் தெரிவித்ததாவது,

இலங்கை - சீன இராஜதந்திர உறவுகள் இன்றுடன் 65 வருடங்கள் பூர்த்தியடைகின்றன.



இலங்கையின் பொருளாதாரத்திற்கு கடந்த 65 வருடங்களாக சீன உதவி வந்துள்ளது. தொடர்ந்தும் நாம் இலங்கைக்கு உதவி வருகின்றோம். சீனா பல கடன் திட்டப் பொதியை அண்மையில் இலங்கைக்கு வழங்கியுள்ளது. இலங்கையின் பல்வேறு அபிவிருத்தித் திட்டத்திற்கும் நாம் கைகொடுத்து வருகின்றோம்.

கடந்த வருடம் பொலனறுவையில் வைத்திய சாலை ஒன்றை நிர்மாணித்து திறந்துவைத்துள்ளோம். அதேபோன்று கொழும்பு பொது வைத்திய சாலையில் பாரிய வசதிகள்கொண்ட வெளிநோயாளர் சிகிச்சை நிலையமொன்றை நவீனமுறையில் நிர்மாணித்துள்ளோம். அடுத்த இரு மாதங்களுக்குள் அவ்வைத்தியசாலை இலங்கை அரசிடம் கையளிக்கப்படும். கொழும்பு - சீனா துறைமுகம், அதிவேக பாதைகள் போன்ற பல்வேறு சேவைகள் போன்ற இந்த நாட்டின் மக்களது சேவைகளுக்காக சீனா உதவி வருவதாகவும் தூதுவர் தெரிவித்தார். அத்துடன், அடுத்த வாரமளவில் இரண்டு கப்பல்களில் அரிசியை இலங்கைக்கு இறக்குமதி செய்யவுள்ளோம். உலகில் சனத்தொகை கூடுதலாக வாழும் நாடு சீனாவாகும்.

சீனாவில் ஆகக்கூடுதலான முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் தமது மத கடமைகள், நோன்பு, புனித ஹஜ் கடமைகள் செய்வதற்கு எவ்வித தடங்கலுமின்றி சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. சில வெளிநாட்டு ஊடகங்களே சீனாவில் வாழும் முஸ்லிம்களுக்கு அநீதி இழைப்பதாக பிழையான செய்திகளை பரப்பி வருகின்றனர் எனவும் சீனத் தூதுவர் முஸ்லிம்கள் மத்தியில் உரையாற்றினார்.

# பீமரத சாந்தி காணும் அந்தண பெருமகன் ராகலை தியாகராஜ புருஷோத்தம ஐயர்



யாழ். வண்ணார்பண்ணையை சேர்ந்தவரும் நுவரெலியா ராகலை சென்லெனாட்ஸ் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் சுமார் 33 வருடங்கள் பிரதான குருவாகவும் பணியாற்றிய பிரம்மஸ்ரீ தியாகராஜ புருஷோத்தம ஐயர் - மோகனாம்பாள் தம்பதிகளின் பீமரத சாந்தி விழாவினை இன்று (01) கொண்டாடுகின்றார்.

புருஷோத்தம ஐயர் தான் பணிபுரிந்துவந்த ராகலை சென்ரிலனாட்ஸ் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்திற்கும் அதனைச் சூழவுள்ள சமூகத்தினருக்கும் அந்தணருக்குரிய நல்லொழுக்கத்துடன் சேவைசெய்து வந்தவர். இவரது சேவையை பாராட்டி ஸ்ரீ வித்யா பீடமூலம் அகில இலங்கை சமாதான பட்டத்தை தற்போதைய மீன்பிடித்துறை அமைச்சரும் முன்னாள் இந்து கலாசார அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மூலம் 2003 ஆம் ஆண்டு வழங்கி கௌரவித்திருந்தார்.

தனது தந்தையார் சிவஸ்ரீ சோ. தியாகராஜ குருக்களிடம் ஜோதிட கலையை கற்று நுவரெலியா மாவட்ட மக்களுக்கு சிறந்த சேவையை செய்து வந்ததுடன், இன்றும் தொடர்ந்தும் செய்துவருகிறார். தனது காலத்தில் ஆலய வளர்ச்சிக்கும் சமூக நலனிலும் அக்கறையுடன் பல பணிகளை செய்து 2019ஆம் ஆண்டு மிக சிறப்பாக கும்பாபிஷேகம் செய்வித்து வைத்தார்.

இவரது தந்தை அமரர் சோ.தியாகராஜ ஐயர் மஸ்கெலிய சண்முகநாத சுவாமி ஆலயத்தில் சுமார் 30 வருடங்கள் ஆன்மீக பணி புரிந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

கொழும்பு கல்வி வலயத்திற்குட்பட்ட தெமட்டகொட ஹைரியா பெண்கள் கல்லூரியில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 8 பேர் சிறந்த புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளதாக பாடசாலையின் அதிபர் ஏ.எல்.எஸ்.நஸீரா குஸைன் தெரிவித்தார்.

தமிழ் மொழி மூலம் ராசிதா றிவாஸ் (172). ஸக்கியா அரபாத் (163). ஹம்னா றிலாஸ் (160), மரியம் ஹமாஸ் (160), மரியம் றிஸ்னி (153), சிங்கள மொழி மூலம் ஆசிகா சுல்பிஹார் (156), அமானி அஸ்ஹர் (155), சுலைஹா இக்ரம் (152) ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

கல்வி கற்பித்த ஆசிரியர்களான ஏ.எச்.எவ்.பரீனா, ஏ.ஏ.என்.றோஸன், சுவர்ணமாலி ரந்தெனிய, நிலுசி ரத்நாயக்க, றிஸ்லா பைஸர், துசாரி தேவிகா ஆகியோர் அதிபருடனும் சித்திபெற்ற மாணவர்களுடனும் காணப்படுகின்றனர்.


# தொலைபேசி கோபுரங்கள் செயலிழக்கும் சாத்தியம்

நாடளாவிய ரீதியில் தொலைபேசி கோபுரங்களில் மின் தடை ஏற்படும் போது அவற்றின் 3G மற்றும் 4G வலையமைப்புகளில் interference reduction (குறுக்கீடு குறைப்பு அமைப்புகள்) செயலிழக்கும் அபாயம் ஏற்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நிபுணர்கள் தெரிவித்துள்ளதாவது,

இதற்காக டீசல் ஜெனரேட்டர் பயன்படுத்தப்பட்டபோதிலும் போதிய அளவு டீசல் இல்லாமையால் Backup Battery மூலம் கிடைக்கும் சக்தி போதுமானதாக இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை செயலிழக்கப்படும்போது 3G, 4G வலையமைப்புகள் அதிவேகங்களில் செயற்படாது எனவும், இதன் விளைவாக அதிக சனத்தொகை உள்ள பகுதிகளில் சிக்னல் குறுக்கீடு ஏற்பட்டு 2G (384kbps, அல்லது அதிகபட்சமாக 48 கிலோபைட் ஒரு வினாடி) வேகத்தில் இயங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



எனவே, மின்தடை ஏற்படும்போது, ஜெனரேட்டர், Off grid system பவர்பேங்கில் வோல்டேஜ் அதிகரிப்பு அல்லது வேறு வழிகளில் இயங்கும் ரவ்டர் இயக்குவதில் எந்தப் பயனும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலக செய்திகள்

# கொடுத்த வாக்குறுதியை மீறியது ரஷ்யா: தலைநகர் கீவ்வில் மீண்டும் தாக்குதல்



## • உறுதியானது உலக நாடுகளின் சந்தேகம்
## • இரத்தானது 2ஆம் நாள் சமரசப் பேச்சு

உக்ரைன் மீது ரஷ்யத் தாக்குதல் இன்று 37ஆவது நாளாகவும் தொடர்கிறது. தலைநகர் கீவ், செர்னிவ் நகரங்கள் மீதான தாக்குதல் குறைக்கப்படும் என ரஷ்யா அறிவித்திருந்த நிலையில், அந்த வாக்குறுதியளித்த அடுத்த நொடியிலேயே அதை காற்றில் பறக்கவிட்டுள்ளது. கீவ் மற்றும் அதன் அண்டை நகரங்களின் மீது நேற்றுமுன்தினம் தீவிரத் தாக்குதல் நடத்தியது. இதன் மூலம், ரஷ்யாவின் நம்பகத்தன்மை குறித்து அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் வெளியிட்ட சந்தேகம் உறுதியாகியுள்ளது. மேலும், இஸ்தான்புல்லில் 2ஆம் நாள் பேச்சில் பங்கேற்காமல் தூதுக்குழுவினர் நாடு திரும்பியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




நேட்டோ அமைப்பில் இணையும் திட்டத்தை கைவிட வலியுறுத்தி உக்ரைன் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி போர் தொடுத்தது. இன்று 37ஆவது நாளாக தொடர்ந்தது. நேட்டோ அமைப்பில் இணையும் திட்டத்தை கைவிடுவதாக உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி கூறினாலும், ஆயுதம் உள்ளிட்ட பல்வேறு உதவிகளை அமெரிக்கா உள்ளிட்ட நேட்டோ நாடுகளிடம் இருந்து பெற்று வருகிறார். இதனால், உக்ரைனின் முக்கிய நகரங்களை நாசமாக்கி வருகிறது ரஷ்ய இராணுவம். தலைநகர் கீவ், கார்கீவ், செர்னிவ், லிலிவ், மரியுபோல், கெர்சன் உள்ளிட்ட கிழக்கு மற்றும் மேற்கு உக்ரைனில் உள்ள முக்கிய நகரங்களில் ரஷ்ய இராணுவம் தரைவழி, வான்வழித் தாக்குதல் மூலம் உயரமான கட்டடங்களை தரைமட்டமாக்கியுள்ளது.





முதலில் ஆயுத உதவி இல்லாததால், பதுங்கி அடித்த உக்ரைன் படைகள் பல்வேறு நாடுகளில் உதவியால் ரஷ்யப் படைகள் மீதான தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளன. உக்ரைன் படைகள் தரைவழி தாக்குதலை சமாளிக்க முடியாமல் ரஷ்ய இராணுவம் பல இடங்களில் பின்வாங்கி வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது. குறிப்பாக, கருங்கடலில் கப்பலை நிறுத்தி இலக்கை குறிவைத்து ஏவுகணைத் தாக்குதலை நடத்தி வருகிறது. கடந்த ஒரு வாரமாக உக்ரைனின் பதிலடியால், ரஷ்யாவின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த பகுதிகளை ஒவ்வொன்றாக மீட்டு வருகிறது. இதனால், உக்ரைனை இரண்டாக பிரித்து, கிழக்கிலுள்ள டான்பாஸ் பிராந்தியத்தை தனி நாடாக அறிவிக்கும் முயற்சியில் ரஷ்யப் படைகள் கவனம் செலுத்தி வருகின்றன. இதற்கிடையே, துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் ரஷ்ய, உக்ரைன் தூதுக்குழுக்கள் இடையே செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பேச்சுவார்த்தையில், ''உக்ரைனிலுள்ள கீவ், செர்னிவ் மீதான இராணுவ நடவடிக்கைகளை ரஷ்யா பல மடங்கு குறைக்கும்'' என்று ரஷ்யா தெரிவித்தது.

மேலும், ரஷ்ய ஜனாதிபதி புட்டினும், உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கியும் அடுத்த வாரம் சந்தித்து நேரடியாக பேசுவார்கள் என்றும் கூறப்பட்டது. இதன்மூலம், போர் முடிவுக்கு வரக்கூடும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. அதேநேரம், ரஷ்யாவின் தாக்குதல் குறைப்பு அறிவிப்பை நம்ப முடியாது என்று அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் சந்தேகம் தெரிவித்தன. ஸெலென்ஸ்கியும் சந்தேகித்தார். இந்த சந்தேகம் தற்போது உறுதியாகியுள்ளது.

தாக்குதலை குறைக்கப் போவதாக அறிவித்த பின் கீவ், செர்னிவ் உள்ளிட்ட நகரங்களின் மீதான தாக்குதலை ரஷ்யா முன்பிருந்ததை விட அதிகமாக தீவிரப்படுத்தியது. மேலும், 2ஆவது நாளாக இஸ்தான்புல்லில் நேற்றுமுன்தினம் இடம்பெறவிருந்த 2ஆம் கட்டப் பேச்சுவார்த்தையும் இரத்தானது. இருநாட்டு குழுக்களும் நாடு திரும்பின.

**மரியுபோலில் தற்காலிகப் போர் நிறுத்தம்**

உக்ரைனின் மரியுபோல் நகரில் மீண்டும் தற்காலிகப் போர் நிறுத்தத்தை ரஷ்யா அறிவித்துள்ளது. இதனால் அங்குள்ள மக்கள் உடனடியாக எல்லைப்பகுதிகளுக்கு வெளியேறும்படி ரஷ்யா கேட்டுக் கொண்டுள்ளது.

செர்னோபில் அணுஉலை வளாகத்திலிருந்து தங்கள் துருப்புகளை ரஷ்யா வெளியேற்றி விட்டதாக அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

இதேவேளை, உக்ரைன் மீதான தாக்குதலை முற்றாக நிறுத்த ரஷ்யாவை இன்னும் பொருளாதார தடைகளால் இன்னும் கடுமையாக நிறுத்தவேண்டும் என்று பிரித்தானியப் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

**40 இலட்சம் பேர் வெளியேற்றம்**

போர் காரணமாக 40 இலட்சத்துக்கும் அதிகமானோர் உக்ரைனிலிருந்து வெளியேறி அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர் என ஐ.நா. அகதிகள் அமைப்பு தெரிவித்துள்ளது. 'இது, 2ஆம் உலகப் போருக்குப் பின்னர் ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய அகதிகள் எண்ணிக்கையாகும். இவர்களில் 23 இலட்சம் பேர் போலந்துக்கு சென்றுள்ளனர். 65 இலட்சம் பேர் உள்நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மரியுபோலில் 210 குழந்தைகள் உட்பட 5,000 பேர் உயிரிழந்துள்ளதாக உக்ரைன் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ரஷ்யா மீது உக்ரைன் ஏவுகணைத் தாக்குதல்**

உக்ரைன் மீது ரஷ்யா கடந்த 36 நாட்களாக கடும் தாக்குதல் நடத்தி, பல நகரங்களை நாசமாக்கிவிட்டபோதிலும், ரஷ்யா மீது உக்ரைன் இராணுவம் ஏன் இன்னும் தாக்குதல் நடத்தாமல் இருக்கிறது என்ற கேள்வி கடந்த சில நாட்களாக எழுப்பப்பட்டு வருகிறது.

இந்நிலையில், தனது நாட்டு எல்லையிலிருந்து 12 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ரஷ்யாவின் பெல்கோரோட் நகர், கிராஸ்னி ஒக்டியாப்ர் கிராமத்திற்கு அருகேயுள்ள ஆயுதக் கிடங்கின் மீது செவ்வாய்க்கிழமை இரவு உக்ரைன் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் எவ்வித உயிரிழப்பும் ஏற்படவில்லை. ஆனால், 4 ரஷ்ய வீரர்கள் காயமடைந்ததாக ரஷ்ய செய்தி நிறுவனமான டாஸ் தெரிவித்துள்ளது.

**செர்னோபில் அணு உலை வெடிக்க வாய்ப்பு**

இதேவேளை, செர்னோபில் அணு உலையைச் சுற்றி ரஷ்யப் படைகள் ஆயுதங்களை வைத்திருப்பதால், தாக்குதலின்போது அணு உலையிலுள்ள வேதிப் பொருட்கள் வெடிக்க வாய்ப்பிருப்பதாகவும் அதனால் ரஷ்யா, படைகளை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் என உக்ரைன் துணை பிரதமர் இரினா வெரஷ்சுக் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**கார்கீவ் புறநகர்ப் பகுதி மீட்பு**

உக்ரைனின் 2ஆவது பெரிய நகரமான கார்கீவின் புறநகரில் Chuguiv என்ற பகுதியை இணைக்கும் முக்கிய வீதியான மாலா ரோகன் கிராமத்தை ரஷ்யப் படைகள் கைப்பற்றியிருந்ததாகவும், 3 நாட்களாக நடந்த கடும் போருக்கு பின்னர் ரஷ்யப் படைகளை பின்வாங்கச் செய்து அப்பகுதியை கைப்பற்றியதாகவும் உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

போரால் சோர்வடைந்த ரஷ்ய வீரர்கள் 40 பேரை பிடித்துள்ளதாகவும், சில ரஷ்ய வீரர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரஷ்ய வீரர்களின் தாக்குதலால் உருக்குலைந்து கிடக்கும் நகரில் சீரமைப்புப் பணியை முன்னெடுத்துள்ளதாகவும், நிர்வாகப் பணிகளுக்கான வேலைகள் நடைபெறுவதாகவும் உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# 6.6ரிச்டரில் அதிர்ந்த நியூ கலிடோனியா

பிரான்ஸ் கட்டுப்பாட்டிலுள்ள நியூ கலிடோனியா தீவில் 6.6ரிச்டர் அளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலநடுக்கம், நௌமியா தீவில் கடலுக்கடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாகவும், நியூ கலிடோனியாவின் கிழக்கே 407 கிலோமீற்றர் தொலைவில் ஏற்பட்டதாகவும் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

முன்னதாக நியூ கலிடோனியாவின் டாடினில் 7 ரிச்டர் அளவில் நிலநடுக்கமொன்று ஏற்பட்டதாக புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. இதனை தொடர்ந்து அந்த பகுதியில் கடும் நில அதிர்வுகள் ஏற்பட்டன.

# 2ஆவது பூஸ்டர் டோஸ் செலுத்திக்கொண்ட பைடன்




அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் 2ஆவது பூஸ்டர் டோஸ் தடுப்பூசி செலுத்திக் கொண்டுள்ளார்.

அமெரிக்காவில் 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முதலாவது பூஸ்டர் டோஸ் செலுத்திக் கொண்ட நான்கு வாரங்களில் 2ஆவது பூஸ்டர் டோஸ் செலுத்தி கொள்ளுமாறு மருந்து கட்டுப்பாடு ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

இதையடுத்து, 79 வயதான ஜோ பைடன் தனது 4ஆவது டோஸ் தடுப்பூசியை செலுத்திக் கொண்டார். பைடனின் செய்தி தொடர்பாளர்களில் ஒருவரான ஜென் சாகி, உள்ளிட்டோருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்ட நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது.

# அரசுக்கு எதிராக வெளிநாட்டுச் சதி

## பிரதமர் இம்ரான் கான் குற்றச்சாட்டு



பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், தமது அரசுக்கு எதிராக வெளிநாட்டுச் சதி உள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ளதுடன், அதற்கான சான்றுகளைப் பகிர்ந்துகொண்டுள்ளார்.

இம்ரான்கான் அரசுக்கு எதிராக எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்துள்ள நிலையில், 342 உறுப்பினர் கொண்ட நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சியின் பலம் 164ஆகக் குறைந்துள்ளது. அதே நேரத்தில் ஆளுங்கட்சியின் அதிருப்தி வேட்பாளர்கள் உட்பட எதிர்க்கட்சியின் பலம் 177ஆக அதிகரித்துள்ளது.

தனது அரசைக் கவிழ்க்க வெளிநாட்டுச் சதி உள்ளதாகக் கூறிய பிரதமர் இம்ரான்கான் அது குறித்த சான்றுகளை இராணுவம், உளவுத்துறைத் தலைவர் ஆகியோரிடம் பகிர்ந்துள்ளதாகச் செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உக்ரைன் - ரஷ்யா போரில் பாகிஸ்தானின் நிலைப்பாடு குறித்து அமெரிக்காவும், ஐரோப்பாவும் அதிருப்தி அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றிபெற்றால் அனைத்தையும் மன்னிப்போம் என்றும், இல்லாவிட்டால் வரும் நாட்கள் மிகவும் கடினமாக இருக்கும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

**உரையை இரத்துச் செய்தார் இம்ரான்**

இம்ரான்கான் அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை MQM கட்சி விலக்கிக்கொண்டு எதிர்க்கட்சி பக்கம் சாய்ந்ததால் பிரதமர் பதவியை இம்ரான்கான் இராஜினாமா செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெறவிருந்த நிலையில் பிரதமர் இம்ரான்கான் நேற்றுமுன்தினம் மாலை நாட்டு மக்களுக்கு உரையாற்ற திட்டமிட்டிருந்தார்.

பாகிஸ்தான் இராணுவ தளபதி உமர் ஜாவத் பாஜ்வா மற்றும் உளவுத்துறை தலைவர் நதீம் அஞ்சும் ஆகிய இருவரும் இம்ரான்கானை பிரதமர் இல்லத்தில் நேரில் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

இதனையடுத்து இராணுவத்தின் ஆலோசனைப்படி நாட்டு மக்களிடம் உரையாற்ற திட்டமிட்டிருந்த நிகழ்ச்சியை இம்ரான்கான் திடீரென இரத்துச் செய்தார்.

**இம்ரானின் உயிருக்கு ஆபத்து**

பாகிஸ்தானில் பிரதமர் இம்ரான்கானுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் போர்க்கொடி உயர்த்தியுள்ள நிலையில், அவரது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாக தெஹ்ரீக் - இ- இன்சாப் கட்சி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பாகிஸ்தான் தெஹ்ரீக் - இ- இன்சாப் கட்சியின் மூத்த தலைவர் பைசல் வாக்டா தெரிவிக்கையில், பிரதமர் இம்ரான்கானை கொல்ல சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதனால் பொதுக்கூட்டங்களில் பேசும்போது குண்டு துளைக்காத பாதுகாப்பு அரணை ஏற்படுத்துமாறு இம்ரான்கானை கேட்டுக்கொள்கிறோம். ஆனால், ''இறைவன் நிர்ணயித்த நேரத்தில் இந்த உலகை விட்டு வெளியேறுவேன்'' என்று இம்ரான்கான் கூறிவிட்டதாக பைசல் வாக்டா தெரிவித்துள்ளார்.

இதனிடையே பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் பிரதமர் இம்ரான்கான் அரசு மீது எதிர்க்கட்சிகள் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதம் நேற்று நடைபெற்றது. தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நாளைமறுதினம் (3ஆம் திகதி) நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம்ரான்கானுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றுதிரண்டுள்ளதால் அவரது அரசுக்கு பெரும்பான்மை பலம் குறைந்துவிட்டது. இருப்பினும், நம்பிக்கை வாக்கெடுப்புக்கு முன்னதாக பிரதமர் இம்ரான்கான் இராஜினாமா செய்ய மாட்டார் என மூத்த அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

# உதைபந்தாட்ட கலவரத்தில் அதிகாரி மரணம்

உலகக்கிண்ண உதைபந்தாட்ட தகுதிகாண் போட்டியில் நடைபெற்ற கலவரத்தில் ஸாம்பிய மருத்துவ அதிகாரி மரணமடைந்தார்.

நைஜீரிய தலைநகர் அபுஜாவிலுள்ள





மொஷூட் அபலா தேசிய மைதானத்தில் நைஜீரியா, கானா அணிகளுக்கு இடையிலான உலகக்கிண்ண தகுதிச் சுற்றுப் போட்டி நடைபெற்றது. 1-1 என போட்டி சம நிலையில் முடிந்ததால் உலகக்கிண்ணப் போட்டியிலிருந்து நைஜீரியா வெளியேற்றப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த நைஜீரிய ரசிகர்கள் அங்கிருந்த பொருட்களை வீசி தீயிட்டு கலவரத்தை உண்டுபண்ணினர்.

இந்தக் கலவரத்தில் ஊக்கமருந்து கட்டுப்பாட்டுக் குழுவில் பணிபுரிந்த ஸாம்பியாவைச் சேர்ந்த மருத்துவர் ஜோசப் கபுங்கோ, மூச்சுத்திணறி மரணமானார்.

“செவ்வாயன்று நடந்த போட்டியில் ஊக்கமருந்து அதிகாரியாக கடமையாற்றிய எங்கள் மருத்துவ அதிகாரி டாக்டர் ஜோசப் கபுங்கோவின் மறைவிற்கு நாங்கள் இரங்கல் தெரிவிக்கிறோம். மேலும் டாக்டர் கபுங்கோவின் குடும்பத்தினருக்கும் முழு உதைபந்து குடும்பத்தினருக்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று ஜாம்பியா உதைபந்து சங்கத் தலைவர் ஆண்ட்ரூ கமங்கா கூறினார்.

போட்டிக்குப் பிந்தைய வன்முறையின் விளைவாக இந்த மரணம் நிகழ்ந்ததாக உள்ளூர் ஊடகங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

நைஜீரிய உதைபந்து கூட்டமைப்பு அறிக்கை ஒன்றில், கபுங்கோ, கானா அணியின் டிரஸ்ஸிங் ரூம் அருகே, ஊக்கமருந்து விசாரணைக்காக ஒரு வீரரை அழைத்துச் செல்ல காத்திருந்தபோது அவர் மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மைதானத்தில் நடந்த வன்செயல் பற்றிய விசாரணையை பீபா தொடங்கிய பின்னர் நைஜீரிய உதைபந்து அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வாய்ப்புள்ளது.

## ஊதா நிற தொப்பிக்கு சொந்தக்காரரான ஹசரங்க:

# ஆர்.சி.பிக்கு இறுதி ஓவரில் வெற்றி



நடப்பு ஐ.பி.எல். தொடரின் 6ஆவது லீக் போட்டியில் வனிந்து ஹசரங்கவின் சுழலில் சிக்கிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 128 ஓட்டங்களுக்குள் சுருண்டுபோக, ரோயல் செலஞ்ர்ஸ் பெங்களூர் அணி முதல் வெற்றியை பதிவுசெய்தது.

நவி மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற குறித்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணி 18.5 ஓவர்களில் 128 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. பெங்களூர் அணி தரப்பில் சிறப்பாக பந்துவீசிய ஹசரங்க 4 ஓவர்கள் வீசி 20 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

129 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய பெங்களூர் அணிக்கு ஆரம்பத்தில் அதிர்ச்சி காத்திருந்தது. அனுஜ் ராவத், அணித் தலைவர் டு பிளெஸ்சிஸ், விராட் கோஹ்லி ஆகியோர் அடுத்தடுத்து வெளியேறினர். ஒரு கட்டத்தில் பெங்களூர் அணி 7 ஓவர்கள் முடிவில் 40 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. இதன் பிறகு டேவிட் வில்லி - ரூதர்போர்டு ஜோடி சற்று நிலைத்து நின்று விளையாடினர்.

இறுதியில் 2 ஓவர்களில் 17 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் போட்டி பரபரப்பான கட்டத்தை எட்டியது. ஹர்ஷல் பட்டேல் - தினேஷ் கார்த்திக் ஜோடி 19ஆவது ஓவரில் தலா ஒரு பவுண்டரி அடிக்க, கடைசி ஓவரில் ஒரு சிக்ஸரை பறக்கவிட்டு பெங்களூர் அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்து சென்றார் தினேஷ் கார்த்திக். 19.2 ஓவர்களில் பெங்களூர் அணி 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக வனிந்து ஹசரங்க தெரிவானார். அது மாத்திரமல்லாமல் நடப்பு தொடரில் அதிக விக்கெட்களை வீழ்த்திய வீரருக்கான ஊதா நிற தொப்பிக்கும் ஹசரங்க சொந்தக்காரரானார்.

KKR vs RCB
போட்டியை காண

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்ற நடப்பு சம்பியன்




நியூசிலாந்தில் நடைபெற்றுவரும் ஐ.சி.சி. மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் நடப்பு சம்பியனான இங்கிலாந்து அணி வெற்றிபெற்று இரண்டாவது அணியாக இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது.

12ஆவது ஐ.சி.சி. மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் 2ஆவது அரை இறுதி ஆட்டம் கிறிஸ்ட்சர்ச் மைதானத்தில் நேற்று நடந்தது. இதில் இங்கிலாந்து - தென்னாபிரிக்க மகளிர் அணிகள் மோதின. நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி



பந்துவீச்சை தெரிவுசெய்தது. முதலில் விளையாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 293 ஓட்டங்களை குவித்தது. ஆரம்ப துடுப்பாட்ட வீராங்கனை டேனி வியாட் சதம் அடித்தார்.

294 என்ற கடினமான இலக்குடன் தென்னாபிரிக்கா விளையாடியது. 38 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 156 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது தென்னாபிரிக்க அணி. அதிகபட்சமாக மிக்னான் டு ப்ரீஸ் 30 ஓட்டங்களை எடுத்தார். இங்கிலாந்து அணி தரப்பில் சோஃபி எக்லெஸ்டோன் 6 விக்கெட்டுகளை அள்ளினார்.

இதனால் இங்கிலாந்து அணி 137 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. சம்பியனை தீர்மானிக்கும் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மோதவுள்ளன.

# “டோனியை போன்று சூழலை எளிதாகக் கையாளுகிறார் கார்த்திக்'' - டு பிளெஸ்சிஸ் பெருமிதம்



கொல்கத்தா அணியுடனான வெற்றிக்கு இறுதி நேரத்தில் ஹீரோவாக மாறிய தினேஷ் கார்த்திக்கை ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் தலைவர் பாப் டு பிளெஸ்சிஸ் பாராட்டி பேசியுள்ளார்.

நவி மும்பையில் நடைபெற்ற ஆர்.சி.பி. - கே.கே.ஆர். அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ஆர்.சி.பி. அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. கடைசி ஓவரில் ஆர்.சி.பி. அணி வெற்றி பெற 7 ஓட்டங்கள் தேவைப்பட்டபோது ரஸ்ஸல் வீசிய ஓவரில் ஒரு சிக்ஸரும் ஒரு பவுண்டரியும் அடித்தார் தினேஷ் கார்த்திக்.

அவரைப் பற்றி ஆர்சிபி அணி கேப்டன் டு பிளெஸ்சிஸ் கூறியதாவது, “நல்ல வெற்றி இது. சிறிய ஸ்கோர்களை விரட்டும்போது நேர்மறை எண்ணங்களுடன் இருக்கவேண்டும். கடைசியில் ஜெயித்துவிடலாம் என்கிற நிலைக்குச் சென்றுவிடக்கூடாது. இன்னும் எளிதாக ஜெயிக்கவே விரும்பினோம். என்ன ஆனாலும் வெற்றி வெற்றிதான். தினேஷ் கார்த்திக்கின் அனுபவம் கடைசியில் உதவியது. நிதானமாக இயல்பாக இருந்தார். ஓட்டங்களை விரட்டுவது கடினமாக இல்லை. கடைசி 5 ஓவர்களில் கிட்டத்தட்ட டோனி போலவே சூழலை எளிதாகக் கையாள்கிறார் தினேஷ் கார்த்திக்'' - என்றார்.




# தேசிய கபடி போட்டிகளில் நிந்தவூர் அல்–அஷ்ரக் தொடர்ச்சியாக சாதனை

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கை பாடசாலை கபடி சம்மேளனம் அகில இலங்கை ரீதியில் நடத்திய தேசிய கபடி போட்டியில் நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையின் 16 வயதுப் பிரிவு



கபடி அணியினர் வெண்கலப் பதக்கத்தினைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளதாக பாடசாலையின் அதிபர் ஏ.அப்துல் கபூர் தெரிவித்தார்.

இப்போட்டிகள் கடந்த 26, 27, 28ஆம் திகதிகளில் மகியங்கனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. கடந்த 2018, 2019, 2020, 2022 ஆகிய ஆண்டுகளிலிருந்து தொடர்ச்சியாக கபடி அணியினர் இச்சாதனையை நிலைநாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிக்காக மாணவர்களை பயிற்றுவித்த ஏ. ஹலீம் அஹ்மத் ஆசிரியருக்கும் மற்றும் முழு ஒத்துழைப்பு நல்கிய விளையாட்டுக் குழு உறுப்பினர்களுக்கும், போட்டியில் பங்குபற்றிய கபடி அணி மாணவர்களுக்கும், அவர்களின் பெற்றோர்களுக்கும் பாடசாலை அதிபர் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துள்ளார்.

# கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றிய புத்தளம் லிவர்பூல்

(புத்தளம் நிருபர்)




புத்தளத்தில் நடைபெற்ற கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான இறுதிப் போட்டியில் புத்தளம் லிவர்பூல் அணி வீரர் எம்.எஸ்.எம்.நஸ்ரி புகுத்திய அடுத்தடுத்த ஹெட்ரிக் கோல்களின் மூலம் அவ்வணி சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக்கியது.

புத்தளம் நகர சபையின் ஏற்பாட்டில் புத்தளம் உதைபந்தாட்ட லீக்கின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற இத்தொடரின் பரபரப்பான இறுதிப்போட்டி அண்மையில் புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் புத்தளம் லிவர்பூல் அணியும், நாகவில்லு எருக்கலம்பிட்டி எவ்.சி. அணியும் பலப்பரீட்சை நடத்தின.

முதல் பாதியில் இரு அணிகளுமே எவ்வித கோல்களையும் பெற்றுக்கொள்ளவில்லை. இரண்டாவது பாதியில் ஆட்டம் விறுவிறுப்பாக மாறியது. சப்ரகமுவ பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன் எம்.எஸ்.எம்.நஸ்ரி 55, 62, 65ஆவது நிமிடங்களில் தொடரான ஹெட்ரிக் கோல்களை செலுத்தி தனது அணியினை முன்னிலைப்படுத்தினார். எனினும், போட்டி நிறைவு பெறும் தறுவாயில் 88ஆவது நிமிடத்தில் நாகவில்லு எருக்கலம்பிட்டி எவ்.சி. அணி வீரர் எம்.அப்கான் தனது அணிக்காக கோலினை போட்டார்.




இறுதியில் 3-1 எனும் கோல் வித்தியாசத்தில் லிவர்பூல் அணி வெற்றி பெற்று சம்பியனாக மகுடம் சூடியதோடு இரண்டாவது இடத்தினை நாகவில்லு எருக்கலம்பிட்டி எவ்.சி. அணி பெற்றுக்கொண்டது. ஆட்ட நாயகனாக ஹெட்ரிக் கோல்களை செலுத்திய லிவர்பூல் வீரர் எம்.எஸ்.எம்.நஸ்ரியும், சிறந்த கோல் காப்பாளராக அதே அணியின் ஏ.ஜே.எம். பரோஜும் தெரிவாகினர்.




புத்தளம் கடற்கரையை பிறப்பிடமாகக் கொண்ட முன்னாள் நகர பிதா மர்ஹூம் கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்தமாக நடைபெற்ற வெற்றிக்கிண்ணத்தை அதே கடற்கரையை பிரதிநிதித்துவப்படுத்தும் லிவர்பூல் அணி சுவீகரித்தமை சிறப்பம்சமாகும்.

புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம்.ரபீக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான சனத் நிஷாந்த பெரேராவும், கௌரவ அதிதியாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஜஸ்வர் உமரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கடந்த 2019ஆம் ஆண்டு புத்தளம் உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட தொடரின் புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்ற விம்பிள்டன், யாழ் முஸ்லிம் யுனைடெட், லிவர்பூல் மற்றும் நியூஸ்டார்ஸ் ஆகிய நான்கு அணிகளுக்கும் இதன்போது பெறுமதியான பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7